விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
சங்குநாதம்

சங்கு 26
ஒலி 024 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 28 ஞாயிற்றுக்கிழமை (12.01.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## நிதி நிலைவரத்தை பகிரங்கப்படுத்துக

# வருவாயை அதிகரிப்பதற்கு அரசிடம் திட்டங்கள் இல்லை


### சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

(கொழும்பு)

வரி அதிகரிப்பைத் தவிர்த்து அரச வருவாய் அதிகரிப்புக்கு அரசாங்கத்திடம் எவ்விதத் திட்டங்களும் கிடையாது.

நாட்டின் நிதி நிலைவரத்தை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க தெரிவித்தார்.

(19ஆம் பக்கம் பார்க்க)



## 17 வயது மாணவன்

# சுழிபுரத்தில் வாளுடன் கைது

(யாழ்ப்பாணம்)

சுழிபுரத்தில் 17 வயது மாணவன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளான்.

சுழிபுரம் பெரியபுலோப் பகுதியிலேயே நேற்று முன்தினம் குறித்த மாணவன் வாளுடன் கைது 19

## ஹெரோயினுடன்

# யாழ்.நகரில் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் நேற்றுக் காலை மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

27 வயதான இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். 19

# பெப்ரவரி மாதம் முதல் வாகனங்கள் இறக்குமதி

### 200 வீதம் முதல் 300 வீதம் வரை வரி விதிக்கப்படும்

(கொழும்பு)

பெப்ரவரி மாதம் முதல் வாகனங்கள் நாட்டில் இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கு 200 வீதம் முதல் 300 வீதம் வரை வரி விதிக்க அரசாங்கம் தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

ஐந்து வருட இடைநிறுத்தத்திற்குப் பின்னர் வாகன இறக்குமதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து, எதிர்வரும் பெப்ரவரி மாதம் 19

# அநுரவின் சீன விஜயம் முக்கியத்துவம் வாய்ந்தது

### சீன வெளிவிவகார அமைச்சு

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் முதல் சீனப் பயணம் இருதரப்பு உறவுகளுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என சீனாவின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

சீனாவில் செய்தியாளர் சந்திப்பொன்றில் சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஹூவா சுன் யிங் இதனைக் குறிப்பிட்டார்.

சீன ஜனாதிபதி ஸீ ஜின் 19

## ஆசிரியையை கட்டிவைத்துவிட்டு

# அச்சுவேலியில் வீடு புகுந்து நகைகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலியில் வீடு புகுந்து நகைகள் திருடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீடொன்றுக்குள் புகுந்த திருடர்கள் வீட்டில் பொருத்தியிருந்த CCTV கமராக்களை கழட்டி வைத்துவிட்டு வீட்டு உரிமையாளரான ஓய்வுபெற்ற ஆசிரியையைக் கட்டி வைத்துவிட்டு நகைகளைத் திருடிச் சென்றுள்ள 19

# நெல்லியடியில் இளம் குடும்பப் பெண் காரில் வந்தவர்களால் கடத்தல்

### சிசிரிவி கமரா உதவியுடன் பொலிஸார் விசாரணை

(கரணவாய்)

நெல்லியடியில் இளம் குடும்பப் பெண் ஒருவர் காரில் வந்த இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

நேற்று மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வாய்பேச முடியாத இரண்டு பிள்ளைகளின் தாயாரான குறித்த குடும்பப் பெண் நேற்று நெல்லியடி நகர்ப் பகுதிக்குச் சென்றிருந்த வேலை வெள்ளை நிறக் காரில் வந்த ஒரு சிலரினால் குறித்த கடத்தல் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுகுறித்து நெல்லியடி பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட் 19

# கசிப்புடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் வறுத்தோலைப் பகுதியில் கசிப்புடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

43 வயதுடைய நபர் ஒருவரே நேற்று முன்தினம் ஒரு போத்தல் 19

# வட மாகாண வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண வலயக் கல்விப் பணிப்பாளர்கள் சிலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் 15ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இவ் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலதி முகுந்தன் யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளராகவும் வடக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) திருமதி 19

# இளவாலை இளைஞன் கட்டுநாயக்கவில் கைது

(யாழ்ப்பாணம்)

இளவாலையைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளான்.

போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து புதுடெல்லி செல்ல முற்பட்டவரே இவ்வாறு நேற்றுக் காலை விமான நிலையை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளான்.

யாழ்ப்பாணம், இளவாலைப் பகுதியைச் சேர்ந்த 35 வயதான இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளா 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் மனைவியின் காதை வெட்டியவர் விளக்கமறியலில்

*(யாழ்ப்பாணம்)*

யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாயப் பகுதியில் மனைவியின் காதை வெட்டியவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று நேற்று உத்தரவிட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பெண் ஒருவர் தனது கணவனின் சித்திரவதை தாங்காது சண்டிலிப்பாயில் உள்ள உறவினரின் வீட்டில் வசித்து வருகின்றார்.

இந்தநிலையில் அங்கு சென்ற கணவன் கடந்த 07.10.2024 அன்று மனைவியின் காதினை வெட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய பின்னர் இச்சம்பவம் குறித்து கடந்த 10.10.2024 அன்று மானிப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

குறித்த சந்தேகநபருக்கு எதிராக வேறு சில முறைப்பாடுகளும் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இந்தநிலையில் குறித்த சந்தேகநபர் நேற்று முன்தினம் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் இதற்கு முன்னரும் மனைவியின் மீது பல்வேறு சித்திரவதைகளைப் புரிந்தவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்திய வேளை அவரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ம-7)

# இலங்கை – இந்திய நட்புறவு வட்ட மேசை கலந்துரையாடல்

இலங்கை - இந்திய நட்புறவு பற்றிய உயர்மட்ட வட்டமேசை கலந்துரையாடல் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தால் கடந்த வியாழக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவின் வரவேற்புரையுடன் இந்தக் கலந்துரையாடல் ஆரம்பமானது.

இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் இருதரப்பு உறவின் முக்கிய அம்சங்களைப் பற்றி விவாதிப்பதற்கும் இரு நாடுகளுக்குமிடையே மேம்பட்ட ஒத்துழைப்பிற்கான வழிகளை முன்மொழிவதற்கும் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் சந்தோஷ் ஜா, சிறந்த பொருளாதார வல்லுனரும் வர்த்தக நிபுணருமான கணேஷ் விக்னராஜா, உள்ளூர் சிந்தனைக் குழுக்கள் மற்றும் கருத்துத் தலைவர்களின் பிரதிநிதிகள் மற்றும் உயர்ஸ்தானிகராலயத்தின் தொடர்புடைய பிரிவுகளை வழிநடத்தும் அதிகாரிகள் போன்றோர் கலந்து கொண்டனர். (ம-7)

# தென்கொரியாவில் வேலை மோசடி செய்த பெண் கைது

தென்கொரியாவில் E8 விசா பிரிவின் கீழ் தொழில்வாங்கித் தருவதாகக் கூறி மக்களை ஏமாற்றியதற்காக ஒரு பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்குக் கிடைத்த 5 முறைப்பாடுகளின் அடிப்படையில், பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் மேற்படி அனுமதிப்பத்திரம் பெறாத வேலைவாய்ப்பு நிறுவனத்தைச் சுற்றி வளைத்து சந்தேகநபரான பெண்ணைக் கைது செய்துள்ளனர்.

தென்கொரியாவில் E8 விசா பிரிவில் வேலைவாய்ப்பு வழங்குவதாக உறுதியளித்து, ஒருவரிடமிருந்து கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் ரூபா வரையில் பெற்றிருப்பது தெரியவந்துள்ளது. (ம-7)

STUDY IN UK
CANADA / AUSTRALIA / FRANCE / SWITZERLAND
IELTS
இம்மாதம் முழுவதும் நிபந்தனைகள் எதுவும் இல்லா 100% இலவச
விசா ஆலோசனைகள் மாணவர்களுக்கும், பெற்றோருக்கும் வழங்கப்படும்
WEC COLLEGE
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
மற்றும் கிளை : சாவகச்சேரி
0779265447/ 0217200989



மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவ 42 வயது சொந்தமாக தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்ப்பில்லை.
தொடர்புகளுக்கு:
077 905 8615
(3027)

விற்பனைக்கு
3 கடைக் கட்டிடமும் ஒரு மேல் வீடும் ஒரு சாதாரண வீட்டின் கட்டிட இடிபாடுகளும் 3 கேற், ஓடு, தீராந்தி, கதவுகள் என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 723 2535
(3011)

பெண் விற்பனையாளர் தேவை
யாழ். நகரில் இயங்கும் எமது புடைவை நிறுவனத்துக்கு புடைவை வியாபாரம் பழகிய அல்லது பழக ஆர்வமுள்ள பெண் ஊழியர்கள் தேவை. நேரில் வரவும்.
(ஞாயிறு தினத்திலும் திறந்திருக்கும்.)
சென்னை பெசன் வேல்ட்
63, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.
(C-2021)

வீட்டுப்பணிப்பெண் தேவை
யாழ்.நகரில் 5 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணிப் பெண் தேவை.
- சம்பளம் - 60,000/-
- உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
- வயதெல்லை: 33 - 55
தொடர்புகளுக்கு:075 498 5400
077 937 0000, 021 221 7600
(3009)

WE ARE HIRING
Maths/ Biology/ Chemistry/ Physics and Technology stream Teachers.
(English snd Tamil medium)
Email your CV to apssengineer@gmail.com or Whatsapp to 077 386 7695 on or before 20.01.2025.
APSS International, 188 KKS Road, Chunnakam.
(538)

PickMe யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில்
உங்களது முச்சக்கர வண்டி, Motorcycle, Car, Van, Lorry அனைத்தையும் PickMe யுடன் இணைத்து அதிகூடிய வருமானம் பெறலாம்.
077 473 7737
(536)

வேலைக்கு பெண் பிள்ளை தேவை
யாழில் இயங்கி வரும் தனியார் நிறுவனத்திற்கு கணனி அறிவுடைய பெண் பிள்ளை தேவை.
001 647 764 5117
(கனடா whatsapp மட்டும்)
(534)

வீடு வாடகைக்கு தேவை
சுன்னாகம், சுன்னாகத்தை அண்மித்த பகுதிகளில் சிறிய வீடு வாடகைக்கு தேவை.
தொடர்புகளுக்கு:
075 744 6026
(533)

நம்பினால் நம்புங்கள்
அதிசயம் ஆனால் உண்மை. உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும். ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும்.
காயத்திரி திருமண சேவை
கன்னாதிட்டி சிவன் கோயில் முன்பாக ரூபி விலாஸ்
076 314 4689
077 844 9861, 076 008 6961
(2977)

காணி விற்பனைக்குண்டு
யாழ்ப்பாணம் ஊரெழு பிள்ளையார் கோவில் முன் வீதியில் 34 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
- ஆனந்தகானம் வீதி முகப்புடன்
- பலாலி வீதியிலிருந்து 1 Km தூரம்
- இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- ஊரெழு கணேசா வித்தியாலயம் 1 Km தூரம்
- செம்மண், நன்னீரூற்று, நிலப்பரப்பு
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- 1 பரப்பின் விலை - பதினைந்து இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் (1550000/-)
- பார்வையிடும் நேரம் - காலை 08 மணி முதல் மாலை 06 மணி வரை
தொடர்புகளுக்கு: 076 069 1105
076 298 1105, 077 468 3354
(3015)

K.P.C இன் கண்ணீர் காணிக்கை




எமது கல்வி நிறுவனத்தின் வணிகக்கல்வி ஆசிரியரான T.S ரிஷிகேசன் அவர்களின் அன்புத் தாயார்
அமரர் செல்வராணி சச்சிதானந்தன்
அவர்களின் இறைபதச் செய்தி கேட்டு துயரடைந்தோம். அன்னாரின் இழப்பினால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
இருபாலை வீதி, கோண்டாவில்.
K.P.C கல்வி நிறுவன இயக்குனர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
(3012)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுரவின் சீன விஜயம்; பதற்றத்தில் இந்தியா

## சுட்டிக்காட்டும் சீன ஊடகம்



(பீஜிங்)

**இலங்கை ஜனாதிபதியின் சீன விஜயத்தினை இந்திய ஊடகங்கள் உன்னிப்பாக உற்று நோக்குவது, அவர்களின் பதற்றத்தை வெளிப்படுத்துகின்றது என சீனாவின் குளோபல் டைம்ஸ் தெரிவித்துள்ளது.**

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சீன ஜனாதிபதி ஜி ஜின் பிங்கின் அழைப்பின் பேரில் இலங்கை ஜனாதிபதி அநுர குமாரதிஸாநாயக்க 14 ஆம் திகதி முதல் 17 திகதி வரை சீனாவிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என சீனாவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஹூவா சுன்யிங் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் அநுரகுமார திஸாநாயக்க சீனாவிற்கு மேற்கொள்கின்ற முதலாவது விஜயம் இது. இந்த விஜயம் சீனா-இலங்கை உறவுகளிற்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது.

இந்த விஜயத்தின்போது சீன ஜனாதிபதியை இலங்கை ஜனாதிபதி சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வார் என சீனாவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

1957 இல் இரண்டு நாடுகளும் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திய பின்னர் இரண்டு நாடுகளும் நீண்டகால நண்பர்களாக அயலவர்களாக விளங்குகின்றன.

மாறிவரும் சர்வதேச இராஜதந்திர சூழ்நிலைகளை எதிர்கொண்டு இரண்டு நாடுகளினதும் உறவுகள் வலுவானதாக விளங்குகின்றன.

எப்போதும் நிலையான உறுதியான வளர்ச்சியை பேணியுள்ளன. வெவ்வேறு அளவிலான இரண்டு நாடுகள் எவ்வாறு சிறந்த நட்புறவையும் பரஸ்பரம் இரண்டு நாடுகளிற்கும் நன்மையளிக்க கூடிய ஒத்துழைப்பையும் பேண முடியும் என்பதற்கு சீன-இலங்கை உறவுகள் உதாரணமாக உள்ளன என சீனாவின் வெளிவிவகார அமைச்சக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதியின் எதிர்வரும் விஜயத்தின் மூலம் காலத்தினால் கௌரவிக்கப்பட்ட உறவை முன்னோக்கி கொண்டு செல்வதற்கும் பரஸ்பர அரசியல் நம்பிக்கையை ஆழமாக்குவதற்கும் புதிய பட்டுப் பாதை திட்ட ஒத்துழைப்பை மேலும் விஸ்தரிப்பதற்கும் சீனா தயாராக உள்ளது என அதன் வெளிவிவகார அமைச்சக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாக திஸாநாயக்க பதவியேற்ற பின்னர் அவர் சீனாவிற்கு மேற்கொள்ளவுள்ள முதலாவது விஜயம், இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு மிகவும் சிறந்த சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.

குறிப்பாக புதிய பட்டுப் பாதை திட்டத்தின் கீழ் இலங்கை மூலோபாய அடிப்படையில் அதிக முக்கியத்துவம் அமைவிடத்தில் உள்ளதுடன் புதிய பட்டுப் பாதை திட்டத்தில் முக்கிய சகாவாக மாறியுள்ளது. இது ஏற்கனவே இரண்டு நாடுகளிற்கும் நன்மைகளை வழங்கியுள்ளது.

இதேவேளை அந்த பிராந்தியத்தில் சீனாவினது செல்வாக்கோ அல்லது வேறு எந்த நாட்டினது செல்வாக்கோ அதிகரிப்பதை இந்திய ஊடகங்கள் விரும்பவில்லை. அவர்கள் கடன் பொறி மற்றும் சீனா அச்சுறுத்தல் போன்ற சொற்றொடர்களைப் பயன்படுத்துவது இதனை வெளிப்படுத்துகின்றது என ஹியு தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதியின் இந்த விஜயம் குறித்து இந்திய ஊடகங்கள் அதிக் கவனத்தைச் செலுத்தியுள்ளன. இந்தியாவிற்கான விஜயத்தை தொடர்ந்தே இலங்கை ஜனாதிபதி சீனாவிற்கு விஜயம் மேற்கொள்கின்றார் என இந்தியன் எக்ஸ்பிரஸ் தெரிவித்துள்ளது.

புதிய பட்டுப்பாதை திட்டத்தின் கீழ் உயர்தர அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கான அர்ப்பணிப்பை இலங்கை ஜனாதிபதி வெளிப்படுத்தியுள்ளதையும் இந்தியன் எக்ஸ்பிரஸ் சுட்டிக்காட்டியுள்ளது. (நி)

# புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் பெப்ரவரியில்

## பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் பெப்ரவரி 10 - 12 ஆம் திகதிகளுக்கு இடையில் வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் பணி அண்மையில் 64 நிலையங்களில் ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது. (நி)

# பசறை நோக்கிச் சென்ற பேருந்து விபத்து

## 13 பயணிகள் காயம்

(கொழும்பு)

கொழும்பில் இருந்து பசறை நோக்கிச் சென்ற தனியார் பேருந்தொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் 13 பயணிகள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சாரதிக்கு ஏற்பட்ட நித்திரைக் கலக்கம் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி)

# சிகரெட், மதுபான விலைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

சிகரெட் விலைகள் மற்றும் கலால் வகைகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் சிகரெட் விலையை அதிகரிக்க இலங்கை புகையிலை நிறுவனம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, நான்கு வகையான சிகரெட்டுக்களின் விலை 5 மற்றும் 10 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளதாக இலங்கை புகையிலை நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மதுபானங்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மதுபானங்களின் விலைகளை 6 சதவீதத்தால் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி)


Family Rehabilitation Centre (FRC) is a leading non-profit, non-sectarian organization engaged in providing holistic rehabilitation services, with increased priority given to Mental Health and Psychosocial Support (MHPSS) for the survivors and the immediate family members of Sri Lankans who have experienced trauma.

**Regional Finance & Administration Officer (Based in Kilinochchi)**

The regional officer is expected to play a multiple role including Finance/Administration/HR and also the implementation of field operations.

**Main Responsibilities :** Responsible for smooth running of the finance, administration & HR functions of the District Offices, and reporting to Head Office.

Minimum Higher National Diploma in Accountancy or equivalent qualification with related accounting work experience is required.

- Checking the preparation of payment vouchers & receipts – checking for supporting documents to ensure that the transactions are accounted into the correct budget line items of each project. To be familiar with Description of the budget line is important.
- Supervision over originating cheque payments at each Centre.
- Carrying out a cash reconciliation and advance settlement reconciliations at each month-end at the Centres.
- Checking of Bank Reconciliations.
- Follow up with regional staff on preparation of monthly time sheets.
- Maintenance of a Fixed Assets Register for each District Centre. This includes updating records, coding and carrying out an annual stock take.
- Procurement – collection of quotations /analysis. To carry out the procurement procedures of FRC.
- Maintenance of leave records at each District Centre.
- Should be willing to undertake visits to different District Centres.
- Assist the Finance & Admin Department with any other duties assigned by the Deputy Director/Executive Director.

**Salary :** Negotiable

Please forward your CV via email (position mentioned in email subject line) with 2 non-related referees within 10 days of this advertisement to **deputy.director@frcsl.org**

**Family Rehabilitation Centre, 296/14, Park Road, Colombo 05**

C-2014


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரை வென்றது நியூசிலாந்து
## இலங்கை அணி ஆறுதல் வெற்றி




மூன்றாவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 140 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆறுதல் வெற்றி பெற்றது. நியூசிலாந்து அணி 2-1 என தொடரை கைப்பற்றி கோப்பை வென்றது.

நியூசிலாந்து சென்ற இலங்கை அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்றது. முதலிரண்டு போட்டியில் வென்ற நியூசிலாந்து அணி 2-0 என ஏற்கெனவே தொடரை கைப்பற்றியது. மூன்றாவது போட்டி ஆக்லாந்தில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு பதும் நிசங்க (66), குசல் மெண்டிஸ் (54), ஜனித் லியானகே (53), கமிந்து மெண்டிஸ் (46) கைகொடுத்தனர்.



இலங்கை அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக் களை இழந்து 290 ஓட்டங்கள் எடுத்தது. நியூசிலாந்து சார்பில் மட்ஹென்றி 4, அணித்தலைவர் சான்ட்னர் 2 விக்கெட் வீழ்த்தினர்.

சவாலான இலக்கை விரட்டிய நியூசிலாந்து அணிக்கு வில் யங் (0), ரச்சின் ரவிந்திரா (1), டேரில் மிட்செல் (2), ரொம் லெதம் (0), பிலிப்ஸ் (0) ஏமாற்றினர். மார்க் சாப்மேன் (81) ஆறுதல் கொடுத்தார். நியூசிலாந்து அணி 29.4 ஓவரில் 150 ஓட்டங்களுக்கு சுருண்டு தோல்வியடைந்தது. இலங்கை சார்பில் அசிதா பெர்ணான்டோ, மகேஷ் தீக்சனா, எஷான் மலிங்கா தலா 3 விக்கெட் வீழ்த்தினர். (ம)

McDonald's
சவுதி அரேபியாவில் வேலைவாய்ப்பு
முற்றிலும் இலவச ஆட்சேர்ப்பு
முன்னாய்வு செய்யப்பட்ட நேர்காணலை
யாழ்ப்பாணத்தில் நடாத்தவுள்ளது.

25 NOS
பயிற்சி உணவக மேலாளர்
(Restaurant Manager Trainee)
SAR. 4500
எதிர்பார்க்கப்படும் தகைமைகள்:
உணவக துறையில் 3-4 வருட அனுபவம் ஆங்கிலம் சரளமாக பேசக்கூடியவர். இளங்கலை பட்டம் (Degree NVQ Level 4) தேவை. வயது 39க்கு கீழ்

180 NOS
சர்வீஸ் க்ரூ (Waiter)
SAR. 1150 +
டூட்டி மீல் + OT
எதிர்பார்க்கப்படும் தகைமைகள்:
அடிப்படை ஆங்கிலம் (படிக்க மற்றும் எழுத)
நல்ல தகவல் தொடர்பு திறன் வயது 32க்கு கீழ்

40 NOS
பஸ் டிரைவர் (Bus Driver)
SAR. 1250 +
டூட்டி மீல் + OT
எதிர்பார்க்கப்படும் தகைமைகள்:
செல்லுபடியாகும் இலங்கை இலகுரக வாகன உரிமம்
அடிப்படை ஆங்கிலம் (படிக்க மற்றும் எழுத)
நல்ல ஆளுமை வயது 35க்கு கீழ்

40 NOS
பராமரிப்பு சுத்திகரிப்பாளர்கள்
(Maintenance Man)
(அடிப்படை தொழில்நுட்ப பின்னணி)
SAR. 1250 + டூட்டி மீல் + OT
கடமைகள்:



திகதி - 18 ஜனவரி 2025
இடம் - TILKO CITY HOTEL
70/6, K.K.S Road, Jaffna.
நேரம்: காலை 9.00 - மதியம் 3.00
உங்கள் சுயவிபர கோவையை கொண்டு வாருங்கள்

ஆன்லைனில் விண்ணப்பிக்கவும்
உங்கள் புதுப்பிக்கப்பட்ட CV யை WhatsApp வழியாக அனுப்பவும்.
Rifnaz 076 222 7963
Haniff 077 187 6473
Swetha 076 217 4889
இறுதி நேர்காணல் 20,21,22 ஆம் திகதிகளில் இடம் பெறும்
Approval No: AL/0742/0033/24
TGL SINCE 1990 Where talent meets career
(C-2022)
தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டுமே தொடர்பு கொள்ளப்படுவார்கள்.
#90 Chatham Street, Colombo 01, Sri Lanka | inquiry@tgl.lk | www.tgluniversal.com

# ஆஸி ஓபன் இன்று ஆரம்பம்
## கிண்ணம் வெல்வாரா ஜோகோவிச்?



ஒவ்வொரு ஆண்டும் ஆஸி ஓபன், பிரஞ்சு ஓபன், விம்பிள்டன், அமெரிக்க ஓபன் ஆகிய 4 கிராண்ட்சிலாம் டென்னிஸ் போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது.

ஆண்டின் முதல் கிராண்ட் சிலாமான ஆஸ்திரேலிய ஓபன் மெல் போர்னில் இன்று ஆரம்பமாகிறது. வருகிற 26ம் திகதி வரை இந்தப் போட்டி நடைபெறவுள்ளது.

24 கிராண்ட்சிலாம் பட்டம் வென்று முதல் இடத்தில் இருக்கும் ஜோகோவிச்சால் (செர்பியா) கடந்த ஆண்டு ஒரு கிராண்ட்சிலாம் கூட கைப்பற்ற முடியவில்லை. அதே நேரத்தில் 2023-ல் அவர் ஆஸ்திரேலிய ஓபன், பிரஞ்சு ஓபன், அமெரிக்க ஓபன் ஆகிய 3 பட்டங்களை வென்றார்.

ஆஸ்திரேலிய ஓபனை 10 தடவை கைப்பற்றிய சாதனையாளரான 37 வயதான ஜோகோவிச் தனது 25-வது கிராண்ட்சிலாம் பட்டத்தை வெல்வாரா? என்ற எதிர்பார்ப்பு அதிகமாக இருக்கிறது.

தரவரிசையில் 7-வது இடத்தில் இருக்கும் அவருக்கு முதல் நிலை வீரரான சின்னர் (இத்தாலி), 3-ம் நிலையில் இருக்கும் கார்லோஸ் அல்காரஸ் (ஸ்பெயின்) ஆகியோர் கடும் சவாலாக இருப்பார்கள். கடந்த ஆண்டு சின்னர் 2 கிராண்ட்சிலாமையும், (ஆஸ்திரேலிய ஓபன், அமெரிக்க ஓபன் ) அல்காரஸ் 2 கிராண்ட்சிலாமையும் (பிரஞ்சு ஓபன், விம்பிள்டன்) கைப்பற்றினார்கள்.

2-வது வரிசையில் இருக்கும் அலெக்சாண்டர் சுவரேவ் (ஜேர்மனி), டெய்லர் பிரிட்ஸ் (அமெரிக்கா), டேனில் மெட்வதேவ் (ரஷ்யா), கேஸ்பர் ரூட் (நோர்வே) போன்ற முன்னணி வீரர்களும் பங்கேற்கிறார்கள்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் கடந்த ஆண்டு முதல் வரிசையில் உள்ள ஷபலென்கா (பெலாரஸ்) 2 கிராண்ட்சிலாம் பட்டத்தையும் (ஆஸ்திரேலிய ஓபன், அமெரிக்க ஓபன்) , 2-ம் நிலை வீராங்கனை இகா ஸ்வியாடெக் (போலந்து) பிரஞ்சு ஓபனையும், பார் பராகிரஜ்கோவா (செக் குடியரசு) விம்பிள்டனையும் கைப்பற்றினார்கள்.

3-வது வரிசையில் இருக்கும் கோகோ கவூப் (அமெரிக்கா), ஜேஸ்மின் பலோனி (இத்தாலி), ஜெங் (சீனா), ரைபகினா (கஜகஸ்தான்) ஆகியோர் போட்டியில் உள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிராம அலுவலர் பதவிக்கு 3000 வெற்றிடங்கள்

## உள்ளூராட்சி அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கிராம உத்தியோகத்தர்களுக்கான சுமார் 3000 வெற்றிடங்கள் காணப்படுவதாக பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக கிராம உத்தியோகத்தர்கள் பல களங்களின் பணிகளைப் பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன குறிப்பிட்டுள்ளார். தற்போதுள்ள சூழ்நிலையை கருத்தில் கொண்டு வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்படுவதுடன் கிராம உத்தியோகத்தர்களின் சேவை அமைப்பு உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இது தொடர்பில் தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி)

# ஹரி ஆனந்தசங்கரியை சந்தித்த தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்கள்



(வவுனியா)

கனடா நாட்டின் அமைச்சராக உள்ள ஹரி ஆனந்தசங்கரியை தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்கிய குழு நேற்று முன்தினம் கொழும்பில் சந்தித்து கலந்துரையாடி உள்ளனர். இதன்போது இலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னரான தமிழ் மக்களின் நிலை, தற்போதைய ஆட்சியாளர்களின் அரசியல் போக்கு மற்றும் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பில் தமிழர்களுடைய எதிர்பார்ப்பு என்பன தொடர்பிலும் கனடா அரசாங்கத்திடம் இதன்போது ஆழமாக ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கலந்துரையாடலில் தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளர் ப.சத்தியலிங்கம், மற்றும் சி.ஸ்ரீநேசன், ஸ்ரீநாத், குகதாசன், து.ரவிகரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (8-250)





உயர்கல்வி மற்றும் துறைசார் வழிகாட்டல் கண்காட்சியான "யாழ்.கல்விக் கண்காட்சி-2025" நேற்று யாழ். வலம்புரி ஹோட்டலில் ஆரம்பமானது. வலம்புரிப் பத்திரிகையின் ஊடக அனுசரணையில் இடம்பெறும் இந்நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் எல்.இளங்கோவன், பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்போர் விவாதம்

# 2 ஆம் இடத்தைப் பிடித்தது அறிவியல் தமிழ் அணி



(யாழ்ப்பாணம்)

அனைத்துலக தமிழ் இளையோர் மாநாட்டை முன்னிட்டு மலேசியா திரங்கானு பல்கலைக் கழகம் நடத்திய அனைத்துலக சொற்போர் விவாதப் போட்டியில் யாழ். மற்றும் கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்களைக் கொண்ட அறிவியல் தமிழ் அணி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில், இலங்கையில் இருந்து தெரிவாகிய யாழ். மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்ட அறிவியல் தமிழ் அணி இந்திய நாட்டு அணியுடன் மோதி 3:2 எனும் விகிதாசாரத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இப்போட்டியில் யாழ்.பல்கலைக் கழகத் தொழில்நுட்பபீட மாணவன் மோகனராஜ் ஹரிகரன், வரலாற்றுத்துறை மாணவனான சிவகுமார் திசான், மொழிபெயர்ப்புக் கற்கைகள்துறை மாணவனான யூலியட் கலைச்செல்வன், கிழக்குப் பல்கலைக் கழகம் மருத்துவபீட மாணவியான அபிராமி நகுலகுமார் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (6-33)

# வடமராட்சியில் திருட்டு

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு மணல் காட்டுப் பகுதியில் பட்டப்பகலில் வீடு உடைத்து ரொக்கப்பணம் மற்றும் பெறுமதியான தொலைக் காட்சிப் பெட்டி திருடப்பட்டுள்ளதாக மருதங்கேணி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை வீட்டில் யாரும் இல்லாததை சாதகமாகப் பயன்படுத்தி வீட்டை உடைத்து அங்கிருந்த 40 ஆயிரம் ரூபாய் பணத்தையும் மற்றும் பெறுமதியான தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றையும் திருடிச் சென்றுள்ளதாக மருதங்கேணி பொலிஸில் கடந்த வியாழக்கிழமை முறையிடப்பட்டுள்ளது. (நி-60)

# தைப்பொங்கல் சிறப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு உதயதாரகை சனசமூக நிலையம் வழங்கும் தைப்பொங்கல் சிறப்பு நிகழ்வு நாளை காலை 5.45 மணிக்கு நிலைய வளாகத்தில் தலைவர் தெ.பிரதாப் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராஜா, சிறப்பு விருந்தினராக JSAC நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி என்.சுகிர்தராஜ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 150 | 180-200 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 180 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 800 | 800 | 1000 | 750-800 | 1000 |
| தக்காளி | 350 | 380 | 400 | 360 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 240 | 220 | 200-250 | 200 |
| கோவா | 180 | 250 | 250 | 270 | 300 |
| கரட் | 200 | 250 | 300 | 300 | 300 |
| பூசணி | 140 | 120 | 150 | 100-130 | 200 |
| புடோல் | 200 | 300 | 200 | 250 | 250 |
| வாழைக்காய் | 150 | 140 | 120 | 100-130 | 250 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 380 | 200-450 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 350 | 200 | 300 |
| பாகற்காய் | 800 | 600 | 600 | 550-600 | 800 |
| வெண்டக்காய் | 150 | 400 | 200 | 250 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 400 | 600 | 400 | 700-750 | 600 |
| லீக்ஸ் | 250 | 380 | 300 | 360 | 400 |
| பீற்றூட் | 600 | 450 | 500 | 380 | 600 |
| கறிமிளகாய் | 850 | 700 | 600 | 650 | 600 |
| முருங்கைக்காய் | 2000 | -- | 1600 | -- | -- |
| போஞ்சி | 300 | 250 | 400 | 300-350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 150 | 200 | 200 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 120 | 80 | 150 | 50-70 | 200 |
| தேசிக்காய் | 300 | 400 | 200 | 250-270 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 220 | 150 | 100-200 | 180-230 |
| இராசவள்ளி | 500 | 700 | 600 | 800 | 600 |
| வெங்காயப்பூ | 650 | 600 | 600 | -- | 800 |
| முள்ளங்கி | 220 | 120 | 200 | 150 | 250 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 180 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 90 | 80 |
| ஈரப்பலா | 100 | 80 | 100 | 90 | 200 |

# இராசிபலன்

12.01.2025
மார்கழி 28, ஞாயிற்றுக்கிழமை
திரயோதசி காலை 6.46 மணிவரை
சதுர்த்தசி பின்னிரவு 5.34 மணிவரை

மிருகசீரிடம் முற்பகல் 11.50 மணிவரை
சுபநேரம் 9.33-11.03 மணிவரை
இராகுகாலம் 5.03-6.33 மணிவரை
சந்திராஷ்டமம் விசாகம், அனுசம்

இரவு நடேசர் ஆருத்திராபிஷேகம்

வளவன்

**மேஷம்:** செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிக்க முற்படுவீர்கள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.

**கடகம்:** இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், வழிபாடு இன்பம் தரும், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், சுபவிரயங்கள் மேலோங்கும் நாள்

**துலாம்:** தடைகள் விலகி தன வரவுகள் கிடைக்கும் நாள், தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், கனிவாகப்பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**மகரம்:** மறைமுக எதிர்ப்புகள் மாறும், உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், உடல் நலன் சீராகும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், கௌரவமான நாள்.

**ரிஷபம்:** பொதுவாழ்வில் புகழ் கூடும், அலங்காரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், நிதிநிலை உயரும் நாள், குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும்.

**சிம்மம்:** விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, பொன்னான நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள்.

**விருச்சிகம்:** வரவைக் காட்டிலும் செலவுகள் அதிகரிக்கலாம், வழிபாட்டில் மகத்துவம் காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை, கௌரவக் குறைவுகள் ஏற்படலாம்.

**கும்பம்:** வளர்ச்சிப்பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, சுபசெய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பச்செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று ஏற்படலாம்.

**கன்னி:** உறவினர்களும் நண்பர்களும் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வரலாம், கனவுப் பலிதமுண்டு, செல்வாக்கு மேலோங்கும் நாள், செயற்பாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு:** குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**மீனம்:** தொழில் ரீதியாக வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், பயணங்களால் பலனுண்டு, நண்பர்கள் வழியில் ஒத்துழைப்புண்டு.

மிகப்பெரிய மனிதர்கள் வாழ்வில் எளிமையைக் கடைப்பிடிப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்

சங்குநாதம்

நாதம் 475

Viber 076 636 3378

12.01.2025

# ஈழத்தமிழினத்தின் மீதான பேரினவாதத்தின் பார்வை!




**தமிழினத்தின் உரிமைகள் ஏன் மறுக்கப்பட வேண்டும். தமிழினத்தின் வளங்கள் ஏன் கொள்ளையடிக்கப்பட வேண்டும். தமிழினத்தின் நிலங்கள் ஏன் அபகரிக்கப்பட வேண்டும். தமிழினத்தின் பூர்வீகம் ஏன் சிதைக்கப்பட வேண்டும். தமிழினத்தின் இன-மத சின்னங்களை ஏன் பௌத்த மயமாக்கலுக்குள் திணிக்க வேண்டும்**

ஈழத்தமிழர் உரிமை மறுப்புப் பிரச்சினை என்பது இன்று நேற்று தோன்றிய பிரச்சினையல்ல அது காலணித்துவ ஆட்சி கைமாற்றப்பட்ட காலம் தொட்டு இருந்து வரும் பிரச்சினையே.

எந்தப் பிரச்சினையாயினும் அதை ஆரம்பத்தில் தீர்த்து வைப்பது மிகச் சுலபம். ஒன்றில் தொடங்கி அந்த ஒன்று பத்தாகி பத்து நூறாகி, நூறு ஆயிரமாகி இப்படிப் பல்கிப் பெருகி அது தீர்க்க முடியாத பிரச்சினையாகிவிடும்.

இதே நிலைதான் ஈழத்தமிழர் உரிமைப் பிரச்சினையிலும் ஏற்பட்டது. தமிழினத்துக்குக் கொடுக்க வேண்டியதை கொடுக்காததன் விளைவு, இந்த நாடு இரத்தம் தோய்ந்த நாடாக மாறியது. ஒரு பிரச்சினை இருக்கிறது. அதற்கான தீர்வும் இருக்கிறது. அந்தத் தீர்வை கொடுக்காமல் பிரச்சினையை வேறு திசைக்கு திருப்பும் கைங்கரியத்தைச் செய்த பெருமை காலம் காலமாக வந்த பெரும்பாண்மை ஆட்சியாளர்களையே சாரும்.

தமிழினத்தின் உரிமைகள் ஏன் மறுக்கப்பட வேண்டும். தமிழினத்தின் வளங்கள் ஏன் கொள்ளையடிக்கப்பட வேண்டும். தமிழினத்தின் நிலங்கள் ஏன் அபகரிக்கப்பட வேண்டும். தமிழினத்தின் பூர்வீகம் ஏன் சிதைக்கப்பட வேண்டும். தமிழினத்தின் இன-மத சின்னங்களை ஏன் பௌத்த மயமாக்கலுக்குள் திணிக்க வேண்டும் போன்ற கேள்விகளுக்கான விடை பெரும்பாண்மை ஆட்சியாளர்களுக்கு நன்கு தெரியும். அதை நடைமுறைப்படுத்தும் அதிகாரமும் அவர்களிடம் இருந்திருந்தது.

ஆயினும் தமிழினத்தின் மீது அத்துணை காழ்ப்புணர்ச்சியை ஏன் கொட்டித் தீர்த்தனர் என்பதை இன்று வரை புரிந்து கொள்ள முடியவில்லை.

வாழையடி வாழையாக வந்த அத்தனை பெரும்பாண்மை ஆட்சித் தலைவர்களும் தமிழினத்தினை அழி(டி)ப்பதை வழமையாக்கினர் என்பதை இவ்விடயத்தில் கூறித்தானாக வேண்டும்.

தனது இனத்தின் உரிமை மறுக்கப்படும் போது அதை தட்டிக் கேட்காமல் இருப்பது தன் இனத்தை தானே அழிப்பதற்குச் சமம்.

தமிழ் இளைஞர்கள் தமிழினத்தின் உரிமைகளைத் தரக்கோரினர். அது பேரினவாதிகளால் பயங்கரவாதமாக சித்தரிக்கப்பட்டது. இந்தச் சித்தரிப்பு முள்ளிவாய்க்கால் இரத்த சரித்திரத்துடன் முடிவுற்றது.

பயங்கரவாதம் அழிக்கப்படுவதாக மேற்கொள்ளப்பட்ட போரில் அப்பாவித் தமிழ் மக்கள் இலட்சக் கணக்கில் கொல்லப்பட்ட வரலாறு பதியப்பட்டதாயினும் அதை மறைக்கும் செயற்றிட்டத்தை பேரினவாத அரசுகள் வினயமுடன் செய்து கொண்டே இருக்கின்றன.

இந்த நாட்டின் குடிமக்களை அழித்தொழித்துவிட்டு அதற்கு நீதியைத் தராது செயற்படுவது ஒரு நாளும் அறமாகாது.

இறுதிப் போரில் பல்லாயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கான ஆதாரங்கள் ஐக்கிய நாடுகள் சபையின் முன் விரிந்து கிடக்கின்ற போதிலும் ஐக்கிய நாடுகள் சபை இதற்கான தீர்க்கமான தீர்வை அறிவிக்காமல் கண்துடைப்பு செயற்றிட்டத்தை அரங்கேற்றுவது தமிழினத்திற்கு மனக்கவலையே.

போர் நிறைவுற்று 16 ஆண்டுகள் கடந்து விட்டன. குற்றமிழைத்தவர்கள் இன்றும் இந்த நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் மீது எந்த நடவடிக்கைகளையும் எடுக்காமல் அவர்களை மேலும் மேலும் பாதுகாக்கும் செயற்பாட்டில் இறங்குவது ஒருநாளும் இலங்கைத் திருநாட்டிற்கு விடிவைத் தராது.

ஈழத்தமிழர்களின் பிரச்சினை ஐக்கிய நாடுகள் சபையில் பேசப்பட்டு, இலங்கைக்கு எதிரான பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டு, ஈழத்தமிழினத்துக்கு மேற்கொள்ளப்பட்ட இன்னல்களுக்கு பொறுப்பு கூற வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றி; காலங்கள் பல கடத்தப்பட்டதே தவிர எந்த அரசுகளாலும் பொறுப்புக்கூறலை நிறைவேற்றவில்லை.

மாறாக சர்வதேச விசாரணைகளுக்குகோ, சர்வதேச தலையீட்டிற்கோ நாம் ஒரு நாளும் அனுமதியோம். தமிழினத்திற்கு மேற்கொள்ளப்பட்ட இன்னல்களுக்கு உள்ளக விசாரணைகளை மேற்கொண்டு தவறு செய்தவர்களை தண்டிக்க நடவடிக்கை எடுக்கிறோம் என வெற்று வார்த்தைகள் வழங்கப்படுகிறதே தவிர அது தொடர்பில் அங்குலமேனும் நகர்வதாய்த் தெரியவில்லை.

இலங்கை வரலாற்றில் தற்போது பெரிய புரட்சி வெடித்திருக்கிறது. அந்தப் புரட்சியினூடே கட்டமைப்புமிக்க ஒரு போராட்ட அமைப்பு நாட்டின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி இருக்கிறது.

நாட்டை சுத்தம் செய்யும் செயற்றிட்டத்தை முன்நிறுத்தி அதை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளில் தீவிரம் காட்டி வருகிறது.

அட, இந்த ஆட்சியிலாவது எமக்கு நீதி கிடைக்கும் என பெருமூச்சு ஆறுதலடைந்த தமிழினத்துக்கு; சர்வதேச விசாரணைக்கோ, சர்வதேச தலையீட்டிற்கோ இலங்கை ஒரு நாளும் இடமளியாது எனக்கூறி, ஐக்கிய நாடுகளின் 57 ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை நிராகரித்திருந்தது தற்போதைய அரசு.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது அமர்வு எதிர்வரும் பெப்ரவரி 24 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், இலங்கைக்கு எதிரான போர்க் குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் உள்நாட்டுப் பொறிமுறை மூலம் அரசு பொறுப்புக் கூறலை வெளிப்படுத்தும். இதில் சர்வதேவ சக்திகளுக்கு இடமில்லை என்று வெளிவிவகார அமைச்சர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

மேற்குறித்த விடயத்தைப் பார்க்கும் போது பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிபீடம் ஏறினாலும் தமிழர் தொடர்பிலும் அவர்கள் பிரச்சினைகள் தொடர்பிலும் பேரினவாத அரசுகள் பார்க்கும் பார்வை ஒன்றுதான் என்பது தெளிவாகப் புரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

ஆலடிப்பிள்ளையார் கோவிலில் திருவாசக முற்றோதல். ஆலடி மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் திருவாசக முற்றோதலில் பங்கேற்றனர்.

வாத்தியார் வைத்திலிங்கம் திருவாசக முற்றோதலுக்குத் தலைமை தாங்கினார்.

இப்போது வாத்தியார் வைத்திலிங்கம் சில கருத்துக்களைக் கூறி, திருவாசக முற்றோதலை ஆரம்பித்து வைப்பார் என ஆலய பிரதமகுரு அறிவிக்க, வாத்தியார் எழுந்தார்.

அடியார் பெருமக்களே! மார்கழித்திங்கள்; திருவாசகத்தைப் பாடிப் பரவுகின்ற காலம்.

மார்கழி மாதம் பிறந்துவிட்டால், திருவாசகத்தை மட்டும் பாடுகின்ற அளவில் திருவாசகத்திற்கு நம்மவர்கள் கொடுத்த முக்கியத்துவம் எத்துணை என்பதை நாம் உணர முடியும்.

மாணிக்கவாசகர் திருவாசகம் எனும் தேனை நமக்குத் தந்தருளினார்.

மனிதப் பிறவி எடுத்த நாம் இறைவனை நினைந்து வழிபட வேண்டும். மற்றவர்களுக்குப் பாவம் செய்யாமல் இருக்க வேண்டும்.

ஆனால் இப்போது நாம் மனித வாழ்வை அர்த்தமற்றதாக்கி விடுகிறோம்.

சமூக வலைத்தளங்கள் மூலமாக நாம் முன்வைக்கின்ற விமர்சனங்களையும் கருத்துக்களையும் பார்க்கும் போது, எங்கள் சமூகம் எங்கே போகிறது என்று எண்ணத் தோன்றுகிறது.

ஆம், அண்மைய நாட்களில் சமூக வலைத்தளங்கள் மூலமாக வெளிப்படுத்தப்படுகின்ற விமர்சனங்கள் அநாகரிகமானவையாக இருப்பதைப் பார்க்க முடிகிறது.

அதிலும் சிலரின் வக்கிரத்தனங்கள் வார்த்தைகளாக, எந்தவித பண்பாடும் நாகரிகமும் இல்லாமல் வெளிவருவதைப் பார்த்து பலரும் வேதனை கொண்டுள்ளனர்.

அதிலும் இத்தகைய அநாகரிகமான வார்த்தைப் பிரயோகங்களில் புலம்பெயர் நாடுகளில் உள்ள நம்மவர்களும் பங்கேற்றிருப்பது தான் வேதனையிலும் வேதனை.

இத்தகைய நிலைமைகள் யாரையேனும் மகிழ்விக்கலாம். திருப்திப்படுத்தலாம். ஆனால் அவ்வாறு திருப்திப்படுகின்றவர்களை நோக்கி அந்த வார்த்தைகள் திரும்பும் போது தான் அவர்கள் அதன் பாதிப்பை- தாக்கத்தை உணர்ந்து கொள்வார்கள்.

அன்புக்குரிய பொது மக்களே! எங்கள் தமிழினம் செய்த தியாகம் கொஞ்சமா?

எத்தனை மாவீரர்கள், எத்தனை பொது மக்கள் தங்களின் இன்னுயிரை எங்கள் விடுதலைப் போராட்டத்திற்காகத் தியாகம் செய்தனர்.

தமிழ் இனம் வாழ வேண்டும் என்பதற்காகத் தங்கள் உயிரைத் தியாகம் செய்த மாவீரர்களை ஒரு கணம் நாம் நினைப்போமாக இருந்தால், அந்த மாவீரர்களின் குடும்பங்கள் பற்றி நாம் சிந்திப்போமாக இருந்தால், எங்கள் உள்ளத்தில் வக்கிரங்களுக்கும் உதவத்த வார்த்தைப் பிரயோகங்களுக்கும் இடமிருக்க முடியுமா?

இன்று எங்கள் இனம் எத்தனையோ அடக்குமுறைகளையும் அநியாயங்களையும் சந்தித்து வருகிறது.

அண்மையில் கிளிநொச்சிப் பகுதியில் சைவ சமயக்குரு ஒருவரை மதம் மாறி ஒருவர் கடுமையாகத் தாக்கி அவர் அணிந்திருந்த சிவ சின்னமாகிய உருத்திராக்கத்தையும் அறுத்தெறிந்துள்ளார்.

இதற்குப் பின்னணியில் கிராமசேவையாளரான அவரின் மனைவியே காரணமாக இருந்துள்ளார் என்ற உண்மை ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

நல்ல காலம் மேற்படி சம்பவத்தை கிறிஸ்தவ மதகுருமார் கண்டித்தார்கள். அவர்களின் கண்டனங்கள் அமைதியை ஏற்படுத்தின.

ஆக, ஒற்றுமையாக இருந்த எங்கள் தமிழினம் இன்று தங்களுக்குள் அடிபட்டு- மோதுப்பட்டு கன்னைபிரிந்து நிற்கிறது.

இந்த நேரத்தில் கற்றறிந்த தமிழ்ச் சமூகம், சமூக வலைத்தளங்கள் மூலம் அருவருக்கத்தக்க வார்த்தைகளை முன்வைத்து ஒருவர் மீது ஒருவர் சேறு வாரி இறைப்பது எங்கள் இனத்தை எங்கே கொண்டு போய்விடும்.

சமூக வலைத்தளங்கள் மூலம் விமர்சிக்கலாம். ஆனால் அதிலும் நியாயமும் நயத்தக்க நாகரிகமும் பண்பாடும் இருக்க வேண்டும்.

இதைவிடுத்து தனிமனிதர்களின் கௌரவத்தை இழிவுபடுத்தும் வகையில் செய்யப்படுகின்ற விமர்சனங்களின் விளைவுகள் நிச்சயம் எங்கள் இனத்திற்குப் பெரும் பாதகமாகவே அமையும்.

தவிர, சமூக வலைத்தளங்கள் மூலம் தரக்குறைவான விமர்சனங்களை, வார்த்தைப் பிரயோகங்களை நாம் முன்வைக்கலாம்.

அதை சிலர் கைகொட்டி வரவேற்கலாம்.

ஆனால் வார்த்தைக்கு வார்த்தை- வாளுக்கு வாள்- துப்பாக்கிக்குத் துப்பாக்கி என்ற நிலைமை எற்பட்டுவிட்டால், எங்கள் தமிழ் இனம் நிம்மதியாக வாழ முடியுமா? என்ன.

ஆம், மற்றவர்கள் அமைதியாக இருக்கிறார்கள் என்பதற்காக, சமூக வலைத்தளங்களில் முகம் தெரியாத அளவில் வார்த்தைகளை எப்படியும் கொட்டித்தீர்க்க முடியும் என்பதற்காக,

அடிப்படை மனிதப் பண்புகளை இழந்து மிகக் கேவலமாக எழுதுகின்ற மனநிலைக்கு நாம் வந்துவிட்டால், அத்தகையவர்கள் எவருக்கும் எதுவும் செய்ய துணிந்து விடுவார்கள்.

சமூக வலைத்தளங்களில் வெளிவருகின்ற மிகக் மோசமான வார்த்தைப் பிரயோகங்கள் எங்கள் இனத்தின் ஒற்றுமையை தகர்த்து விடுகின்றன.

எங்கள் இனம் எவ்வளவோ உயிர் இழப்புக்களை, சொத்தழிவுகளை சந்தித்திருந்தும் இன்னமும் விடிவு கிடைக்காத இனமாகவே இருக்கிறது.

இதற்கு எங்களிடம் ஒற்றுமை இல்லாததே மூல காரணமாகும்.

ஆம், எங்கள் தமிழ் அரசியல்கட்சிகள் ஒற்றுமையை இழந்து நிர்மூலமாகின. பழம்பெரும் அரசியல் கட்சியான இலங்கை தமிழரசுக் கட்சி சிதலமடைந்துள்ளது.

தமிழ் அரசியல் கட்சிகளே ஒற்றுமைப்படுங்கள் என கோசம் எழுப்பிய தமிழ் மக்களின் குரல்கள் தமிழரசு கட்சியினருக்கு கேட்கவில்லை. அவர்களுக்குப் பதவிகளே பெரிதாகின.

கட்டையில் போகின்ற போதிலும் பதவிகள் தங்களோடு வர வேண்டும் என நினைக்கின்ற சுயநலம் சார்ந்த கொடுமை எங்கள் தமிழினத்தை எங்கே கொண்டு போய் விட்டுவிட்டது.

அன்புக்குரிய தமிழ் மக்களே! எங்கள் தமிழ் அரசியல் கட்சிகளை ஒற்றுமைப்படுத்த வேண்டும் என நாம் நினைப்பதற்குள்; இப்போது தமிழ் மக்களின் ஒற்றுமையை உடைப்பதற்கான களம் உருவாக்கப்பட்டுவிட்டது.

அதில் தமிழ் சார்ந்த பெரியவர்கள், அறிஞர்களை கண்டபாட்டில் தூற்றி அவர்களை ஓரங்கட்டுகின்ற வியூகம் அமைக்கப் பட்டுவிட்டது.


தரமான விமர்சனங்களை, கருத்தாழம் மிக்க வாதங்களே வலுப்படுத்தும். மாறாக, கௌரவமற்ற வார்த்தைகள் கௌரவமானவர்களை மௌனிக்கச் செய்யும். இந்த மௌனம் அநீதி கண்டும் நீடிக்கும்.

அதேசமயம் இத்தகைய கீழ்நிலைப்பட்ட விமர்சனங்களால் நாம் நேரத்தை வீணடிக்கும் போது எங்கள் இனத்தின் பாதை மாறி பயணங்கள் வேறாகி விடும்.

இதையும் கடந்து, முகநூல் விமர்சனங்களின் தாக்கங்கள், ஆயுதக் குழுக்களை- கொலைகளை- வஞ்சகத்தனங்களை கட்டவிழ்த்துவிடும்.

ஆகையால் அனைவரும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். இது தொடர்பில் நம் சமயத் தலைவர்களும் புத்திஜீவிகளும் கூடி ஆராய்ந்து சமூக வலைத்தளங்களில் வெளிவரும் மிக மோசமான வார்த்தைகளுக்கு முடிவு கட்ட வேண்டும்.

இதை நாம் செய்யத் தவறுவோமாயின் அத்தனை சமய, சமூக அமைப்புக்களும் சமூக வலைத்தளங்களில் கீறிக்கிழிக்கப்பட்டுத் தொங்கவிடப்படும் என்பதை இந்த நேரத்தில் கூறி, இப்போது திருவாசக முற்றோதல் இடம்பெறும் என வாத்தியார் தனது தலைமையுரையை நிறைவு செய்ய, பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க பாரொடு விண்ணாய் பரந்த எம் பரனே... என்ற திருவாசகம் காற்றோடு கலந்தது.



## சமூக வலைத்தளங்களில் காத்திரமான விமர்சனங்களை முன்வையுங்கள்

ஆதித்தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை

**076 097 3126**

என்ற இலக்கத்திற்கு
SMS,
Whats app செய்யுங்கள்



பொலநறுவையில் காணப்படும் சோழர் கால சிவாலயமும் நந்தியும்

தமிழ் சினிமாவில் வெளிவரும் தற்போதைய பாடல்கள்காதில்தேன்பாய்ச்சுகிறதா வியாசரே?

இலங்கையில் ஆதி சமயம் எது வியாசரே?

**இன்றைய கணவன் மனைவி பற்றிக் கூறுங்கள் வியாசரே?**

இந்து - மாதகல்

மனைவி : என்னங்க சீக்கிரம் சாப்பிட வாங்க!

கணவன்: நான் வர நேரம் ஆகும். நீ சீக்கிரம் சாப்பிடு.

மனைவி: நான் சாப்பிட்டு விட்டேன். உங்க சாப்பாட்டையும் சாப்பிட்டு விடுவேன் என்று பயமா இருக்கு. லேற்றா வந்திட்டு அப்புறம் என்னைத் திட்டக் கூடாது.

**இந்திய கிரிக்கெட் வீரர் ஹர்திக் பாண்டியா மீது வைக்கப்பட்ட விமர்சனங்களுக்கு தற்போது அவர் பதிலடி கொடுத்திருக்கிறாரே?**

நிலா-கிளிநொச்சி

குஜராத் அணிக்கு கிண்ணத்தைப் பெற்றுக் கொடுத்த ஹர்திக்கை மும்பை அழைத்தது உண்மை.

ஆனால் ஹர்திக் ரோகித் சர்மாவிடம் பேசி விட்டு வருகிறேன் என்று கூறியிருக்கலாம்.

அணித் தலைவர் மோகம் அவர் கண்ணை மறைத்து விட்டது. அதற்கு அவர் இப்போது பலன் அனுபவித்துக் கொண்டிருக்கிறார். அவ்வளவு தான்.

**இன்றைய நவீனத்தில் பிள்ளைகள் பிறிலியன்ராக இருக்கிறார்களே வியாசரே?**

கணேஷ்-கருகம்பனை

சீனியை நிலத்தில் கொட்டிய மகனை உடனே சுத்தம் செய் என்று கூறிய தாய்க்கு பத்து வயது மகன் கூறுகிறான் ஐந்து நிமிசம் பொறுங்கோ அம்மா எறும்பு வந்து கிளீன் பண்ணிவிடும் என.

**சிதம்பர இரகசியம் என்றால் என்ன வியாசரே?**

மகாலட்சுமி-கொக்குவில்

மனைவியிடம் கூறிய விடயங்களில் எது அடுத்த வீட்டுக்காரரின் மனைவிக்குத் தெரியாமல் இருக்கிறதோ அதுவே சிதம்பர இரகசியம் எனப்படும்.

**இந்த உலகில் மிகவும் பயங்கரமான ஆயுதம் எது வியாசரே?**

தவராஜன்-கொற்றாவத்தை

தீயினால் சுட்ட புண் உள்ளாறும், ஆறாதே நாவினால் சுட்ட வடு.

**தமிழ் சினிமாவில் வெளிவரும் தற்போதைய பாடல்கள் காதில் தேன் பாய்ச்சுகிறதா வியாசரே?**

ஜானுஷா-கோப்பாய்

முதலில் பாடலுக்காக இசையா? இசைக்காகப் பாடலா? என்பதிலேயே தற்போதைய இசையமைப்பாளர்களுக்கு குழப்பம் இருக்கிறது.

திரைப்படத்தில் ஒரு பாடல் வருகிறது எனின் அதற்கு ஒரு சந்தர்ப்பம் இருக்க வேண்டும். அந்த சந்தர்ப்பத்தை இசையைக் கேட்பவர்களுக்கு உண்டாக்க வேண்டும்.

உதாரணமாக அமைதியான நதியினிலே ஓடம் ஓடும் அளவில்லாத வெள்ளம் வந்தால் ஆடும்... பாடலைக் கூறலாம். இவ்வாறு பழைய பாடல் கள் பாடலின் நிலைக்கு எம்மை அழைத்துச் சென்று விடும்.

என்னத்திற்கு எதற்கு என்றே தெரியாமல் டம்மு டம்மு என்று அடிப்பது தான் இன்றைய இளைஞர்களுக்குப் பிடிக்கிறது.

**இந்த உலகில் மக்கள் ஒற்றுமை இல்லாமல் இருப்பதற்கு என்ன காரணம் வியாசரே?**

வினுஷியன்-வட்டுக்கோட்டை

பணம் மனித வாழ்வில் என்றைக்கு புகுந்ததோ அன்றே மனித குலத்தின் ஒற்றுமை நிலை குலைந்து விட்டது.

இப்போது இந்த உலகின் இயக்கம் எதற்காக என்று தேடலில் இறங்கிப் பாருங்கள் இறுதியில் பணம் என்ற புள்ளியிலேயே முடிவடையும்.

அந்தளவிற்குப் பணம் மனிதனை ஆட்கொண்டு விட்டது.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**இலங்கையில் ஆதி சமயம் எது வியாசரே?**

வியாசகன்-யாழ்ப்பாணம்

இந்து மதம் என்பதை தொல்பொருள் ஆய்வுகள், வரலாற்றுப் பேராசிரியர் க.இந்திரபாலா எழுதிய ஆதி இலங்கையில் இந்துசமயம் என்ற நூல் தெளிவாக விளக்குகிறது.

இலங்கையில் பௌத்த சமயம் வேரூன்ற முன்னரே இந்து சமயம் நிலைத்திருந்ததற்கான மிகச்சிறந்த ஆதாரங்களுடன் எழுதப்பட்டுள்ளது. முடிந்தால் அந்தப் புத்தகத்தை வாங்கி வாசித்துப் பாருங்களேன்.

**பாவத்தின் சம்பளம் மரணம் இது குறித்து வியாசரின் கருத்து?**

குமார்-யாழ்ப்பாணம்

நூறு விகிதம் உண்மை. இலங்கைத் தீவில் சிறுபாண்மைத் தமிழினத்துக்கு பேரினவாத அரசுகளால் செய்யப்பட்ட கொடூரம் கொஞ்சநஞ்சமல்ல.

மனித வர்க்கத்தால் மேற்கொள்ளப்படாத மிகப்பெரும் கொடூரம் தமிழினத்துக்கு இழைக்கப்பட்டது. இந்தக் கொடூர செயலைச் செய்தவர்கள் இப்போதும் இந்த பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என நினைக்கும் போதுதான் பாவத்தின் சம்பளம் மரணம் எனும் வாதம் பிழைக்கிறதோ என எண்ணத் தோன்றுகிறது.

**2025 ஐ.பி.எல் கிண்ணம் யாருக்கு வியாசரே?**

பிரவீஸ்-பருத்தித்துறை

உலகக் கிண்ண போட்டிகளில் வெல்லும் அணி எது என்று கணித்து விடலாம். ஆனால் ஐ.பி.எல் அணிகளை அவ்வாறு எளிதாக கணித்து விட முடியாது.

ஏனென்றால் ஐ.பி.எல் அணி பல்வேறு நாடுகளின் வீரர்களை ஒன்றிணைத்த அணி. இந்நிலையில் எந்த அணி வெல்லும் என அவ்வளவு எளிதில் கணித்து விட முடியாது.

**அரிசி, உப்பு, தேங்காய் தட்டுப்பாடுகளின் காரணத்தை மாணவர்களுக்கு விளக்கலாமல்லவா?**

திகான்-வடமராட்சி

அண்ணாமலை பல்கலைக்கழக மாணவி பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என தன்னைத் தானே சாட்டையால் அடித்துக் கொண்டார் பா.ஜ.க வின் தமிழக தலைவர் அண்ணாமலை.

தன்னைத்தானே சாட்டையால் அடித்துக்கொள்வது எப்படி என்பதை பொலிடிக்கல் சயன்ஸ் பாடத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என ஜூனியர் விகடன் இதழில் எழுதியிருந்தது. உங்கள் கேள்வியைப் படிக்கும் போது அதுவே நினைவுக்கு வந்தது.

# காலத்தால் அழியாத கானங்கள்



திரைப்படம்: தை பிறந்தால் வழி பிறக்கும்
பாடியவர்: டி.எம். சௌந்தரராஜன், பி. சுசீலா
இயற்றியவர்: ஏ. மருதகாசி
இசை: கே.வி. மஹாதேவன்

தை பொறந்தா வழி பொறக்கும் தங்கமே தங்கம்
தங்கச் சம்பா நெல் விளையும் தங்கமே தங்கம்
தை பொறந்தா வழி பொறக்கும் தங்கமே தங்கம்

ஆடியிலே வெதை வெதைச்சோம் தங்கமே தங்கம்
ஐப்பசியில் களையெடுத்தோம் தங்கமே தங்கம்
கார்த்திகையில் கதிராச்சு தங்கமே தங்கம்
கார்த்திகையில் கதிராச்சு தங்கமே தங்கம்
கழனியெல்லாம் பொன்னாச்சு தங்கமே தங்கம்

தை பொறந்தா வழி பொறக்கும் தங்கமே தங்கம்
தங்கச் சம்பா நெல் விளையும் தங்கமே தங்கம்
தை பொறந்தா வழி பொறக்கும் தங்கமே தங்கம்

கன்னியரின் மனசு போலே தங்கமே தங்கம்
கல்யாணமாகுமடி தங்கமே தங்கம் ஆமா
கன்னியரின் மனசு போலே தங்கமே தங்கம்
கல்யாணமாகுமடி தங்கமே தங்கம்
வண்ண மணி கைகளிலே தங்கமே தங்கம்
வண்ண மணி கைகளிலே தங்கமே தங்கம் ஆமா
வளையல்களும் குலுங்குமே தங்கமே தங்கம்

தை பொறந்தா வழி பொறக்கும் தங்கமே தங்கம்
தங்கச் சம்பா நெல் விளையும் தங்கமே தங்கம்
தை பொறந்தா வழி பொறக்கும் தங்கமே தங்கம்

சுத்தச் சம்பா நெல்லு குத்தி தங்கமே தங்கம்
முத்தத்திலே சோறு பொங்கி தங்கமே தங்கம்
குத்து வெளக்கேத்தி வச்சு தங்கமே தங்கம்
குத்து வெளக்கேத்தி வச்சு தங்கமே தங்கம்
கொண்டாடி மகிழ்ந்திடுவோம் தங்கமே தங்கம்

தை பொறந்தா வழி பொறக்கும் தங்கமே தங்கம்
தங்கச் சம்பா நெல் விளையும் தங்கமே தங்கம்

தை பிறந்தால் வழி பிறக்கும் 1958 ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ்த் திரைப்படமாகும். ஏ. கே. வேலன் இயக்கத்தில் வெளிவந்த இத்திரைப்படத்தில் எஸ். எஸ். ராஜேந்திரன். வி. கே. ராமசாமி மற்றும் பலர் நடித்திருந்தனர். இது பிரேம் நசீர் நடித்த முதல் தமிழ்த் திரைப்படமாகும்.

# உலகை திரும்பி பார்க்கவைத்த பெண்கள்



**"பாராளுமன்றத்தில் நடனமாடிய" ஹனா-ராஹிட்டி மைபி-கிளார்க்**

1853 ஆம் ஆண்டு முதல் 2023 வரையிலான நியூசிலாந்து பாராளுமன்ற வரலாற்றில் 21 வயதே ஆன முதல் இளம் எம்.பி.யாக தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஹனா-ராஹிட்டி மைபி-கிளார்க். நியூசிலாந்து பாராளுமன்றத்தைத் தனது போர் முழக்கத்தால் அதிர வைத்தவர். மாவோரி பழங்குடியின மக்களின் உரிமைகளுக்காகவும் சலுகைகளுக்காகவும் கொண்டு வரப்பட்ட மசோதாவில் திருத்தம் நடைபெற்றதால் ஆவேசம் அடைந்த ஹனா, பாரம்பரிய பழங்குடியின மக்களின் பாடலைப் பாடியும் ஹாக்கா என்ற நடனமாடியும் ஆக்ரோஷமாகத் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தி, சட்ட மசோதா நகலைக் கிழித்தெறிந்தார்.



**"இறுதிச்சடங்கு" பூஜா சர்மா**

இந்தியாவைச் சேர்ந்த பூஜா சர்மாவுக்கு 28 வயதுதான். ஆனால் இதுவரை 4 ஆயிரத்துக்கும் அதிகமான உரிமை கோரப்படாத உடல்களுக்கு இறுதிச்சடங்கு செய்து தகனம் செய்துள்ளார்.1996 ஆம் ஆண்டு டில்லியில் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவர். கடந்த 2022 ஆம் ஆண்டு அவரது சகோதரர் கொடூரமாகக் கொல்லப்பட அவரது இறுதிச்சடங்கை பலருடைய எதிர்ப்புகளுக்கு மத்தியில் செய்து முடித்தார் பூஜா. அதன் பிறகு ஒவ்வொரு மனிதனின் முடிவும் கண்ணியமாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்து டில்லியில் இறக்கும் அடையாளம் காணப்படாத உடல்களை காவற்துறையினரிடம் இருந்து பெற்று அந்த உடல்களுக்கு இறுதிச்சடங்கு செய்து மரியாதையுடன் தகனம் செய்து வருகிறார்.

**"துப்பாக்கிகளின் மத்தியில்" கிறிஸ்டினா ஆஸி**

லெபனானைச் சேர்ந்த கிறிஸ்டினா ஆஸி ஒரு புகைப்படப் பத்திரிகையாளர். தன் நாட்டின் மீது இஸ்ரேல் தொடுத்த போர் குறித்தும் போரினால் ஏற்பட்ட பாதிப்புகள்



குறித்தும் ஆவணப்படம் எடுக்க முயற்சி செய்ய, அப்போது நடந்த துப்பாக்கிச்சூட்டில் ஆஸியுடன் இருந்த சக பத்திரிகையாளர் கொல்லப்பட்டார். ஆஸியும் பலத்த காயமடைந்தார். அதனால் அவரது காலைத் துண்டிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தப் போர் காரணமாக நூற்றுக்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் கொல்லப்பட, பத்திரிகையாளர்களின் பாதுகாப்புக்காக போராட ஆரம்பித்தார் கிறிஸ்டினா. இந்த வருடம் பாரிஸில் நடை பெற்ற ஒலிம்பிக் நிகழ்வின்போது, ஒலிம்பிக் தீபத்தை ஏந்திச் சென்றார் கிறிஸ்டினா ஆஸி..



**"வைரல் சிண்ட்ரோம்" மேடிசன் டெவ்லின்**

டவுன் சிண்ட்ரோமால் பாதிக்கப்பட்டவர்களின் மீது இந்தச் சமூகம் கொண்டுள்ள முன்முடிவுகளை மாற்றுவதற்காக மேடிசன் நடித்த 'என்னால் முடியும் என நினையுங்கள்' என்ற வீடியோ இந்த ஆண்டு வைரல் ஆனது. நடிகையும் மாடலுமான டெவ்லின், நியூயார்க் பேஷன் வீக்கில் இடம்பெற்றுள்ளார். சிறந்த தொகுப்பாளர், பேச்சு நிகழ்ச்சி மற்றும் பொழுதுபோக்கு செய்திகளின் நெறியாளர் ஆகியவற்றிற்கான கனடியன் ஸ்கிரீன் விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்ட டவுன் சிண்ட் ரோம் கொண்ட



முதல் நபர் மேடிசன் தான்.

**"விண்வெளியே வீடு" சுனிதா வில்லியம்ஸ்**

கடற்கரை ஹெலிகொப்டர் பைலட்டாக தன் கரியரைத் தொடங்கிய சுனிதா வில்லியம்ஸ் 1998 இல் நாசாவில் விண்வெளி வீராங்கனையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2007 ஆம் ஆண்டு விண்வெளியில் மாரத்தான் ஓடிய முதல் நபர் இவரே. 2024 ஜூன் 5 அன்று போயிங் ஸ்டார்லைனர் விண்கலத்தில் விண்வெளிக்குப் புறப்பட்டபோது அது வெறும் எட்டு நாள் பயணம் என்றே இந்த உலகம் நினைத்திருந்தது. ஆனால் விண்கலத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக்கோளாறு காரணமாக, சுனிதா வில்லியம்ஸ் மற்றும் அவரது சக வீண்வெளி வீரர் பேரி வில்மோர் பெப்ரவரி 2025 வரை பூமிக்குத் திரும்பமாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. இதனால், விண்வெளியிலேயே இருந்து சில ஆராய்ச்சிகளை மேற்கொள்வதாக முடிவெடுத்துள்ளார் சுனிதா வில்லியம்ஸ். விண்கலத்தை அவரது "மகிழ்ச்சியான இடம்" என்று கூறியுள்ளார்.

(தொடரும்...)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மிளகு இனித்தமா?

முல்லா நஸ்ருதீனிடம் நண்பர் ஒருவர் வந்தார். தனது தொழிலின் பின்னடைவு பற்றி, வாழ்வின் தோல்விகளைப் பற்றியெல்லாம் விபரித்துப் புலம்பியவர், முன்னேற்றத்துக்குத் தீர்வு சொல்லும்படி கேட்டுக் கொண்டார்.

"நாளைக்கு அரைக் கிலோ மிளகு வாங்கி வாரும். தீர்வு சொல்கிறேன்" எனக்கூறி அனுப்பி வைத்தார் முல்லா. மறுநாள் விடிந்ததும் நண்பர் மிளகு வாங்கிக்கொண்டு வந்தார். அவரிடமிருந்து மிளகைப் பெற்றுக்கொண்ட முல்லா, ஒரு மிளகை எடுத்து வாயில் போட்டுக்கொண்டார். காரமாக இருந்தது. முல்லா மீண்டும் ஒரு மிளகை எடுத்து வாயில் போட்டார் நாக்கு எரிச்சலுற்றது. இப்படி ஒவ்வொன்றாக மிளகை எடுத்து அவர் வாயில் போட்டு மென்றதில், கண்ணீர் கொட்டத் தொடங்கியது.



ஒரு கட்டத்தில் காரம் தாங்காமல் ஆ..... ஊ..... என்று கத்த ஆரம்பித்தார். ஆனால், "மிளகைத் தின்பதை நிறுத்தவில்லை. நண்பர் பொறுமை இழந்தார். ஏன் இப்படி மிளகைத் தின்று கொண்டே இருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

முல்லா சொன்னார், "அட... ஒன்று இல்லாவிட்டால் வேறொன்றாவது இனிப்பாக இருக்காதா எனப் பார்க்கிறேன்!"

அவர் சொன்னதன் மறைபொருள் நண்பருக்குப் புரிந்தது. ஒன்றும் பேசாமல் எழுந்து சென்றார். உங்களுக்கு ஏதேனும் புரிந்ததா?

மிளகின் இயல்பு காரம். இனிப்பை வேண்டுகிறவர் கற்கண்டை அல்லவா தேடி உண்ண வேண்டும். ஆனால், பெரும்பாலும் நடப்பது என்ன?

முல்லாவின் நண்பரைப் போல துயரமான வாழ்வைத் தேர்வு செய்துவிட்டு, அனுபவம் இல்லாத தொழிலில் இறங்கிவிட்டு... இனிமை வராதா என்று ஏங்குபவர்களே அதிகம். கிடைக்காதபோது வீணே சலித்துக் கொள்கிறோம் இது தவறு.

நமக்கானவற்றைத் தேர்வுசெய்வதில் தெளிவு வேண்டும். அதற்கு முன்னதாக நம்முடைய திறன், தகுதி என்ன என்பதை அறிந்துகொள்ளும் ஞானம் வேண்டும். அதற்கு பக்தி உதவி செய்யும்.

பக்தி என்பது வெறும் வழிபாட்டுச் சடங்குகளால் நிறைந்தது அல்ல. வாழ்வுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குவது! அடக்கம், அன்பு, நேர்மை, எளிமை என சகலதையும் நமக்குள் சேர்ப்பது பக்தி. அகங்காரம், பொறாமை, பொறுமையின்மை போன்ற தேவையற்ற குப்பைகளை நம்மிடம் இருந்து விலக்கி வைப்பது.



# ஆச்சி அறிவுரை

## ஆ உரஞ்சிக்கல்

### பேராண்டி...

பாட்டியைப் பாக்கிரத்துக்கு ஆவலா இருக்கிறாய் போல, தங்கத்தைப் பார்க்க ஒரு நாள் பாட்டி வருவன். யோசிக்காத.

இண்டைக்கு பாட்டி உனக்கு சொல்லப் போறது ஆ உரஞ்சிக் கல் பற்றி. என்ன பாட்டி புதுச் சொல்லா சொல்லுறா எண்டு பார்க்கிறியோ? ஆ உரஞ்சிக்கல் காரணப்பெயர்தான்.

"ஆ" என்றால் பசுவைக் குறிக்கும். மாடுகள் தங்களது சுணையைப் ( கடி ) போக்குவதற்காகப் பயன்படும் இந்தக்கல்.

முன்னைய காலங்களில பசுக்கள் செல்வம் நிறைந்த பொருளாகப் பார்க்கப்பட்டது. ஒருவர் வீட்டில பசுக்கள் இருந்தால் அவர் மிகவும் செல்வந்தர் என்பது பொருள்.

அந்தக் காலங்களில வீதி ஓரங்களில ஆடு, மாடுகள் தண்ணீர் குடிக்கத் தொட்டி கட்டி அதுக்கு அருகில ஆ உரஞ்சிக்கல் நடப்பட்டிருக்கும்.

பிராணிகள் தாகம், தீர தண்ணீர் குடிச்சிட்டு, அந்தக் கல்லில தங்கட சுணைகளைப் ( கடி ) போக்கிக்கிட்டு நிம்மதியா படுத்து தூங்குவினம்.

வீதிகள் அகலிக்கிற போர்வையில இந்தப் பழமையான சொத்துக்கள் பிடுங்கி எறியப்பட்டும் அடிச்சு உடைக்கப்பட்டு விட்டுது. ஆனாலும் ஆங்காங்கே ஆ உரஞ்சிக் கல்லைப் பார்க்கக் கூடியதா இருக்குது. உதாரணத்துக்கு யாழ்ப்பாணம் ஆறுகால் மடத்தில அது அப்பிடியே பழைமை மாறாமல் இருக்கிறதைக் காணலாம். அப்பா - அம்மாவோட ரியூசன் போகேக்க ஒருக்கால் அதில இறங்கி அதைப் பாரு மோனை.

ஆ உரஞ்சி கல்லுகள் தான் அழிக்கப்படுகிறது எண்டு பார்த்தா சைவ சமயத்தோட பின்னிப் பிணைஞ்சு இருக்கிற, செல்வச் செழிப்புள்ள மாடுகளும் அநியாயமா அழிக்கப்படுவதை நினைக்க நெஞ்சம் பதை பதைக்குது.

ஓ.... இப்பவும் தீவகப் பக்கம் நிறைய மாடுகள் நிக்குது. அதில ஆக்களின்ர பட்டி மாடு, கட்டாக்காலி மாடு எண்டு இலச்சக்கணக்கான மாடுகள்.

இப்ப அதுகள களவாகப் பிடிச்சு இறைச்சியாக்கிற கொடுமைகளைக் கேள்விப்பட ஈரக்குலையே நடுங்குது பேராண்டி.

கன்றுத்தாச்சி மாடுகளையே பிடிச்சு சாக்காட்டி இறைச்சியாக்கிட்டு வயித்தில இருக்கிற கன்றுக்குட்டியை கிணத்தில போட்டுட்டு போகிறாங்கள் எண்டால், அவங்களிட்ட அன்ப, கருணைய, இரக்கத்த எதிர்பார்க்கேலுமா பேராண்டி.

ஐந்தறிவு ஜீவன்களில அம்மா எண்டு அழுகிறது மாடு மட்டும் தான். அதாலதான் மாடுகள் மனிதரோட ஒன்றி வாழுதுகள்.

மாடுகளுக்கு தீவகத்தில நடக்கிற அநியாயத்தை தடுத்து நிறுத்தவேணும். அதுக்கு சம்பந்தப்பட்டவர்கள் கடும் நடவடிக்கை எடுக்கவேணும். போராண்டி அப்பாட்டைக்கேட்டு வீட்டில ஒரு மாட்டுக்கண்டு வாங்கி கட்டு, அதோட அன்பா இரு, நீ காட்டிற அன்புக்கு கைமாறா அது உனக்கு நிறையுணவு பால் தரும்.

பாட்டி வருவா...




ஆறுகால்மடத்தில் இருக்கும் நீர்த்தொட்டியுடனான ஆ உரஞ்சிக்கல்

மாவை நா.கஜேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடர்தரும் தொடர் வண்டி....!



காங்கேசன் கொழும்பு வழி
ஐந்து வண்டி தினமோடும்!
ஐந்து மணிப் பயணம் தான்!
ஐயப் படாதீர் என்றார்..!

தண்டவாளத் தொடர்பணியில்
வண்டவாள மோசடியோ?
ஊழல் திமிங்கிலங்கள்
சுருட்டிக் கொண்டனவோ?

கண் முன்னே கரட் தொங்க
கழுதை வண்டி இழுத்தல் போல்
ஆணைச் சீட்டுப் பயணம்
அரச பணிக் கனவாச்சு!

அனுராதபுரத்தின் அப்பால்
"ஆறு மாத வேலை" என்றார்
பல்லைக் கடித்திருந்தும்
பாதை வேலை தீரவில்லை!

திருத்துவதில் மோசடியோ?
எந்திரம் விட மறுப்போ?
நிறுத்திய வண்டிகளில்
பொறுக்கிகள் திருடினரோ?

பத்திரிகை வழியே தான்
பல கதைகள் வருகிறதே!
உயிரச்சம் இன்றி வர
ரயிலே சேவை வேண்டுமையா!

**இரா. ஜெயக்குமார்**

## மகிழ்தல் மறந்தாயே...!

நிலவு காத்திருந்தது...!
இரவின் வருகைக்காய் ;
பனியோடு கலந்து...
மனிதத்தை குளிர்விக்க...!

தென்றல் காத்திருந்தது...!
மொட்டுக்கள் விரிவிற்காய் ;
மலரின் வாசம் கலந்து...
மனிதரை மகிழ்விக்க...!

கடல் காத்திருந்தது...!
முகிலின் வரவிற்காய் ;
மழையாக மாறி...
மனிதர் நீர் பருக !

சூரியன் காத்திருந்தான்...!
விடியலின் வருகைக்காய் ;
இருளகற்றி...
மானிடனுக் கொளியேற்ற...!
பூமித்தாய் தாங்கிக் கொண்டாள்...!
பாரமெலாம் ; - தன்
மைந்தர் மகிழ்தலுக்காய்...!

மகிழ வேண்டிய மனிதன் ஏனோ ;
'மதம்' பிடித் தழுகின்றான்...? (லை-கு)

**சாந்தையூரிவன்**

## வாழ்த்துகிறேன் உன்னை



வெள்ளிவிழாக் கண்ட வலம்புரியே
வியந்து நிற்கிறேன் உன்னழகில்
அள்ளித் தந்தாய் அறிவுதனை
அகத்தால் தந்தேன் நன்றிதனை
துள்ளிக் குதிக்கும் மழலையைப்போல
துய்ய இதழாய் தினம் வருவாய்
கள்ளமில்லா உன்பணியில்
கருத்துகள் சிறப்பாய் உன்னரங்கில்

நடுவம் தவறாத தண்மதியே
நற்றமிழ் உன்னில் நர்த்தனமே
உடுக்கள் போலவே மின்னிடுவாய்
உலக முன்றலில் உன்பெயரே
தருக்களின் நிழலாய்ப் படர்கின்றாய்
தருவாய் செய்திகள் சுடச்சுடவே
வருவாய் தினமும் புலர்பொழுதில்
வந்தனம் சொல்வோம் மகிழ்வோடு

ஆலடி தந்த மாநாடு
அலசி ஆயும் கருத்துக்களம்
ஆலமாய் ஆகும் வாழ்வினுக்கு
அழகாய் மருத்துவ ஆலோசனை
தாலமாய்த் தரணியில்
உன்வளர்ச்சி தரணி போற்றும்

ஊடகமாய் ஞாலம் மீதில்
ஞயம்படநீ நன்றே வாழ
வாழ்த்துகிறேன்.

**உடுவிலூர்க்கலா,**
**சபாபதிப்பிள்ளை வீதி,**
**உடுவில்.**

## எங்களுக்கு பொங்கல் இல்லை



ஊரெல்லாம் பொங்கல்
தெருவெல்லாம் பட்டாசுச் சத்தம்

போகமழையை நம்பி
நெல்வைச்ச ஏழை விவசாயி
குடும்பம் நாங்கள்

இந்த முறை வந்த
கொஞ்ச நெல்லையும் வித்து
அம்மாவுக்கு பானை அக்காவுக்கு
படிப்புச்செலவு அப்பாவுக்கு
போன முறை உரக்கடன் காசு
மிச்சத்துக்கு எனக்கு
பள்ளிக்கூடத்துக்கு கொப்பி புத்தகம்

மறந்தே போய்விட்டோம்
அரிசி வித்த காசில
இம்முறை பொங்கலுக்கு
எங்களுக்கு அரிசி வாங்க ?

பொங்கி வழிந்தது கண்கள் எல்லாம்
அப்பாவுக்கு ஆறு குளமாய்!

**கவிக்கிறுக்கன் - இணுவில்**

## அன்பு வாசகர்களே!


உங்கள் அபிமான சங்குநாதத்தில்
நீங்களும் எழுதலாம்....

- அரசியல்
- இலக்கியம்
- கவிதை
- கட்டுரை

ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி,
தொலைபேசி இலக்கம் என்பவற்றை
குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.

ஆசிரியர், வலம்புரி - சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126

## கழுகும், காட்டெருமையும் வயல்காரரும்



- புதுவை இரத்தினதுரை -

எங்கள் வானத்தில் இருளகற்ற இதுவரையில்
திங்கள் வரவில்லை, நிரண்டகரு மேகத்தைக்
கலைத்துவிட இங்கே காற்றெதுவும் வீசவில்லை.
நிலைத்து நிற்கும் வர்க்க நெடுமலையைத் தகர்த்துவிட
பூகம்பம் ஏதும் பெரிதாய் நிகழவில்லை.
ஆரம்பம் போலே..... ஆங்காங்கு சிறுதூறல் வந்ததுதான்
ஆனால்...... வரண்ட நிலம் குளிரவில்லை.
இந்த நிகழ்வேதான் இப்பொழுதும் தொடர்கிறது.
காட்டெருமை எங்கள் கடப்புக்குள் மேய்கிறது.
வீட்டுக்குக் காவலென வீட்ட நாய் கடிக்கிறது.
ஆனை திமிர் கொண்டு அலைகிறது ; எங்களது
சேனைக்குள் வந்ததும் சிலவேளை மிதிக்கிறது.
அமெரிக்கக் கழுகு அமருதற்கு இடந்தேடி.
குமரிக் கடலோரம் குறிவைத்துப் பறக்கிறது.
கழுகை எங்களது கழுகு மரம் மீதமர்த்த
தொழுது வரவேற்கும் தொழும்புகளும் நடக்கிறது ;
இத்தனையும் நடக்கிறது
என்றாலும் வயல்காரர்
நித்திரையாக் கிடக்கின்ற நிகழ்வே தொடர்கிறது.
வயலுக்கு நீர் பாய்ச்ச வாய்த்த கரங்களெல்லாம்
விழலுக்கு நீர் பாய்ச்சல்
விரும்பத் தகும் செயலா?
விழலுக்கு நீர் பாய்ச்சி வேர்த்துக் களைத்த
புயல் காற்றே வா!
உன்னைக் கணக்கிட்டுக் கொள்
பின்னர் ஆற்றுப்படுத்தி
அளவாக வீசு நீரை வயலுக்குப் பாய்ச்சு
வாய்க்காலைச் செப்பனிடு
அயலை எழுப்பு, அதிகாலை ஏர்பூட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# களம் பல கண்ட யாழ் கோட்டை

செங்கை ஆழியான்

40

சுதந்திர உணர்வு கொண்ட தமிழ் மக்களை என்றும் அடக்கி வைத்திருப்பதற்கு நிரந்தர இராணுவ முகாம்கள் அவசியமானவை எனச் சிங்கள அரசு கருதத் தொடங்கியது.

*1962 ஆம் ஆண்டு அரசுக்கு எதிராக இராணுவ - பொலிஸ் சதி ஒன்று நிகழவிருந்தது. அச்சதி அம்பலமாகியதால் கைது செய்யப்பட்டவர்களில் ஒருசிலர் யாழ்ப்பாணக் கோட்டை மறியற்சாலையில் சிறை வைக்கப்பட்டனர்.*

*ஏப்ரல் 05. 1971 நள்ளிரவு 11.30 மணி, யாழ்ப்பாண நகரம் நல்ல உறக்கத்தின் தழுவலில் ஆழ்ந்திருந்த வேளையில், யாழ்ப்பாணம் கோட்டைப்பக்கம் இருந்து துப்பாக்கிகளிலிருந்து விடுபட்ட சன்னங்கள் வெடித்துச்சிதறுகின்ற சத்தம் எழுந்தது. அமைதியான யாழ்ப்பாணத்தின் மோனத்தூக்கத்தை அத் துப்பாக்கி வெடிச்சத்தம் சிதைத்தது. ஆங்கிலேயர் காலத்திற்குப் பின்னர் அப்படியான தொடர்ச்சியான துப்பாக்கி வெடிச்சத்தத்தை யாழ்ப்பாணம் கேட்டதில்லை. சுதந்திரமடைந்த பின்னர் அது நான் முதன் முதல் தொடர்ந்து கேட்ட துப்பாக்கிச் சத்தம். அது தான் முதன் முதல் யாழ்ப்பாணத்து மக்களின் நித்திரையைக் குழப்பிய துப்பாக்கிச் சத்தம். ஆம். யாழ்ப்பாணக் கோட்டைச் சிறைச்சாலையில் சிறைப்பட்டிருக்கும் தங்கள் இயக்கத்தின் மாபெருந்தலைவன் றோசன விஜய வீரவை மீட்டுச்செல்வதற்காக தென்னிலங்கையிலிருந்து இங்கு வந்த ஜனதா எக்சத் பெரமுன என்ற ஜே.வி பி இயக்கத்தினரின் மீட்புத் தாக்குதல் நடந்துகொண்டிருந்தது. யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தையும் யாழ்ப்பாணக் கோட்டைக்குள் புகுந்து சிறைச்சாலையும் ஜே.வி.பி இயக்கத்தினர் முற்றுகையிட்டுத் தாக்கினர்.*

*அக்காலத்தில் யாழ்ப்பாணக் கோட்டைக்குள் எந்நேரமும் சர்வசாதாரணமாக உட்சென்று வரலாம். மாலை வேளைகளில் நேரம் கிடைத்தால் கோட்டை உள் மைதானத்தில் விளையாடி விட்டும் வரலாம். ஆக சிறைச்சாலைப் பகுதியில் மட்டும் ஜெயிலர்கள் காவலிருப்பார்கள்.*

*இலங்கைச் சுதந்திரத்தின் பின் முதன் முதல் யாழ்ப்பாணக் கோட்டைத் தாக்குதல் நடந்தது. ஏன் ? எதற்கு? ஸ்ரீலங்காவில் முதலாளித்துவ ஆட்சியாளருக்கு எதிராக ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தி மக்களாட்சியை ஏற்படுத்தும் நோக்குடன் கொரில்லா யுத்தத்தை ஜாதிக எச்சத் பெரமுன இளைஞர்களைச் சேர்த்து நடாத்தியது.*

*அதன் தலைவர் றோகன விஜயவீரவின் கோட்பாடு மிகத் தெளிவானது இலகுவானது. எந்த ஒரு புரட்சியும் பாட்டாளிகளினால் ஆயுதம் எடுக்காமல் வெற்றியடைந்ததில்லை.*

(தொடரும்..)

# கடல் புறா




காலத்தின் பதிவு 135

## இரகசியத்தின் திறவுகோல்

குணதிசைச் சாளரத்தின் மூலம் சுள்ளென்று கன்னத்திலடித்த கதிரவன் கிரணங்களால் எழுதப்பட்டுக் கண் விழித்துக்கொண்ட கூலவாணிகன் சேந்தன் தனது பஞ்சணையில் இருமுறை புரண்டு படுத்துத் தன் கண்களையும் நன்றாகக் கலக்கிவிட்டுக் கொண்டான். பிறகு கூரையிலிருந்த சித்திரங்களை ஆராய்ந்து சில விநாடிகள் மிரண்டு விழித்தான்.

மறுபடியும் கண்களைப் பலமாகத் தேய்த்துக் கலக்கி விட்டுக் கொண்டு எதிரே சற்றுத் தூரத்திலிருந்த மரத்தின் மீது கிடந்த பெரும் மெழுகு உருண்டையையும் பார்த்துத் திடீரெனப் பஞ்சணையில் துள்ளி உட்கார்ந்தான். மெழுகு உருண்டை இருந்த மஞ்சத்தில் மெழுகுக்கு அருகே ஒரு மதுக் குப்பியும் கிண்ணமும் இருப்பதையும் கவனித்துப் பெரிதும் குழம்பினான். "இரவு நான் படுக்க முயலும் போது இளைய பல்லவர் இந்த மதுக் குப்பியையும், கிண்ணத்தையும் அனுப்பியது உண்மைதான். இருந்தாலும் நான் குடிக்கவில்லை. எப்படி குடிக்க முடியும்! எனக்கும்தான் பயங்கரப் பணியை இட்டிருந்தாரே படைத்தலைவர்!" என்று பஞ்சணையில் உட்கார்ந்தபடி தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். அந்த மதுக் குப்பியும், கிண்ணமும் வந்தது அவனுக்கு நன்றாக நினைவிருந்தது. பேழையிலிருந்த மெழுகை எடுத்து மதுக் குப்பியிருந்த மஞ்சத்தில் வைத்ததும் ஞாபகத்தில் இருந்தது. அத்துடன் மதுக்குப்பியை எடுக்காமல் தான் மெழுகை மட்டும் எடுத்துக் கொண்டு பலவர்மன் அறைக்குச் சென்றதும் திட்டமாக நினைப்பிலிருந்தது கூலவாணிகனுக்கு. அது மட்டுமல்ல சென்ற இரவில் நடந்தது அனைத்துமே அவன் புத்தியில் தெளிவாகத் தென்பட்டன.

நள்ளிரவில் தான் ஓசைப்படாமல் நடந்து பலவர்மன் அறையை நாடியது. கதவைத் தொட்டதும் கதவு திறந்து கொண்டது. பலவர்மன் ரத்த வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்தது. தான் வெளியே ஓட முயன்றது. பிறகு "நில்" என்ற சொல் தன்னைத் தடுத்தது ஆகிய ஒவ்வொரு நிகழ்ச்சியும் சந்தேகமறத் தெரிந்தது கூலவாணிகன் சேந்தனுக்கு.

அந்தக் காலை நேரத்தில் கூட முதல் நாளிரவு அறையின் பயங்கரச் சூழ்நிலை அவன் கண் முன்பு எழுந்து அவனை நடுங்க வைத்தது. முதுகில் குருதி பாயக் கிடந்த பலவர்மனும்அவனால் கொலை செய்யப்பட்டவர்களின் சித்திரங்கள் பக்கச் சுவர்களிலிருந்து கோரவிழி விழித்த பயங்கரமும் கண்முன்பு எழுந்ததால் காலை நேரத்திலும் நடுங்கினான் சேந்தன். "நில்" என்ற சொல்லைத் தொடர்ந்து வந்த பூரண கவசமணிந்த அமீர் தன்னை அறையை விட்டு ஓட விடாமல் தடுத்து. குப்புற விழுந்து கிடந்த பலவர்மனைப் புரட்டிவிட்டுக் கழுத்திலிருந்த சாவிக்கு மெழுகு ஒற்றி எடுக்கக் கட்டளையிட்டதும் மெழுகு ஒற்றப்பட்டவுடன் சென்று விட்டதும் நன்றாகப் புத்தியில் நடமாடவே. அடுத்தபடி என்ன நடக்கிறதென்பதை அறியாமல் சேந்தன் திணறினான்.

"மெழுகு ஒற்றியபிறகு என்ன நடந்தது? நான் எப்படி இங்கே வந் தேன்," என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்ட சேந்தன். "அடடா? மெழுகில் சாவியின் அமைப்பு இருக்குமே! அதை யாராவது பார்த்துவிடப் போகிறார்கள்!" என்று கிலி பிடித்துச் சரேலெனப் பஞ்சணையை விட்டிறங்கி மஞ்சத்துக்காகப் பாய்ந்து அங்கிருந்த மெழுகு உருண்டையைக் கையிலெடுத்தான்.

மெழுகில் சாவியின் அமைப்பு ஏதுமில்லை. அது ஒற்றி யெடுத்த மெழுகாகவே தெரிய வில்லை சேந்தனுக்கு. அதனால் பெரும் குழப்பத்துக்குள்ளான சேந் தன். மதுக் கிண்ணத்தை எடுத்துப் பார்த்தான். அதன் அடியில் சிறிது மது தங்கிக் கிடந்தது. அதன் வாடையும் விபரீத மாயிருந்தது.

கூலவாணிகன் பைத்தியம் பிடிக்கும் நிலைக்கு வந்து தனது மண்டையை இருமுறை பட்டென்று கைகளால் தட்டிக் கொண்டான். "நான் உண்மையில் பலவர்மன் அறைக்குச் சென்றேனா அல்லது அத்தனையும் கனவா? நான் கட்டளையை நிறைவேற்றினேனா? அல்லது மதுவைக் குடித்து மயங்கிப் பஞ்சணையில் உறங்கி விட்டேனா? தவிர மதுவில் மயக்க மருந்தின் வாடை அடிக்கிறதே? யார் போட்டிருப்பார்கள்?

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்


432

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# சீன வைரஸ் (China virus) புதிய ஒரு பெருந்தொற்றா?

அண்மைக்காலமாக சமூக வலைத்தளங்களிலும் பத்திரிகைகளிலும் பேசும் பொருளாய் இருப்பது இந்த சீன வைரஸ் (china virus) என்பதாகும். இந்த வைரஸ் சீன நாட்டில் தற்போது பரவி வருகின்றது. இது கொவிட்-19 போல ஒரு பெரும் தொற்றை ஏற்படுத்துமா? பாரிய உயிரிழப்புக்களை ஏற்படுத்துமா? என்னும் அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

சீன வைரஸ் என்பது Human meta penumo virus என்னும் வைரஸ் ஆல் ஏற்படுகின்றது. இது ஒரு புதிய வைரஸ் அல்ல முதல் முதலில் விஞ்ஞானபூர்வமாக 2001 ஆம் ஆண்டு நெதர்லாந்தில் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் இந்த வைரஸ் சுமார் 60 வருட காலமாக மக்களிடையே காணப்பட்டதாகக் கருதப்படுகின்றது. இது பொதுவாக 5 வயதிற்குட்பட்ட சிறுவர்களிலேயே ஏற்படுகிறது. குறிப்பாக 6தொடக்கம் 12 மாதங்களிற்கு இடைப்பட்ட சிறு குழந்தைகளில் ஏற்படுகின்றது. இது உலகில் உள்ள பிறக்கும் எல்லா குழந்தைகளையும் தாக்குகின்றது. ஆனால் பெரும்பாலானவர்களுக்கு இது அதிக பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. ஒரு சில குழந்தைகளிலேயே இது நியூமோனியாவை ஏற்படுத்தலாம். இதனால் மரண வீதம் மிக மிக குறைவானதாகும் வளர்ந்தவர்களையும் வயோதிபர்களையும் இந்த வைரஸ் தாக்கலாம் ஆனால் வளர்ந்தவர்களில் இந்த நோய் அதிகம் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை சிறு குழந்தைகளிலும் வயோதிபர்கள் மற்றும் நீர்ப்பீடனத்தொகுதி பாதிக்கப்பட்டவர்களிலும் இது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்த லாம். HIV/AIDS நோயாளிகள் சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டவர்கள் போன்றவர்களின் உடலில் எதிர்ப்பு சக்தி குறைவாக காணப்படுவதனால் ஏனைய நோய்களைப் போல இந்த வைரஸினால் அதிகம் பாதிப்படைய லாம். இந்த நோயின் அறிகுறிகளை பார்ப்போமாக இருந்தால் சாதாரண தடிமனை போன்ற அறிகுறிகளையே இது ஏற்படுத்துகின்றது. மூக்கடைப்பு மூக்கில் இருந்து நீர் வடிதல், தும்மல், தொண்டை நோய், இருமல் போன்ற அறிகுறிகளை இது பொதுவாக ஏற்படுத்துகின்றது.



காய்ச்சல், மூச்சு விட சிரமம் போன்றன சிலருக்கு எற்படுகின்றது. மிகச் சிலருக்கே காய்ச்சலுடன் நியூமோனியா என்ற நுரையீரல் தாக்கம் ஏற்படுகின்றது. இந்த வைரஸ் தொய்வு அல்லது ஆஸ்துமா நோயுடையவர்களில் அதிக தாக்கம் ஏற்படுத்தலாம். இந்த நோய்த்தாக்கம் அதிகமாக குளிர் காலங்களில் ஏற்படுகின்றது. இந்த வைரஸால் எதிர்ப்பு சக்தி பூரணமாக ஏற்படுவதில்லை. எனவே குழந்தைப் பருவத்தில் இந்த நோய் ஏற்பட்டாலும் வளர்ந்த பின்னும் கூட இந் நோய் ஏற்படலாம். இந்நோயைக் கட்டுப்படுத்தக்கூடிய மருந்துகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆராய்ச்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு கொண்டிருக்கின்ற போதிலும் இன்றுவரை இந்நோய்க்கு தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே வருமுன் காப்பதே சிறந்தது. இது பொதுவாக நோய்வாய்ப்பட்ட ஒருவர் தும்மும்போது இருமும் போது மற்றும் கதைக்கும் போது வெளிவரும் சிறு துளிகள் மூலம் பரவுகின்றது. ஆனால் இது காற்றின் மூலம் பரவுவதில்லை. குறிப்பாக ஆறு அடிக்களிற்கு உட்பட்ட தூரத்தில் உள்ளவர்களுக்கு பரவுகிறது. அதுமட்டுமல்லாமல் நோயாளி பயன்படுத்திய துபாய்,டி படுக்கை விரிப்புகள், கைக்குட்டை போன்றவற்றாலும் பரவலாம். தொடுகை மூலமும் இந்நோய் பரவலாம். நோயாளியைத் தொட்டு விட்டு எமது வாய், கண், மூக்குப் போன்ற பகுதிகளைத் தொடும் போது பரவலாம். இந்நோயிலிருந்து பாதுகாப்புப்பெற நோயாளியை தனிமைப்படுத்த வேண்டும். நாங்கள் கொவிட்-19 காலத்தில் எவ்வித நடைமுறைகளைக் கடைப்பிடித்தோமோ அதே விதிமுறைகளை கடைப்பிடிப்பதன் மூலம் இந்நோயிலிருந்தும் Influenza அல்லது flu போன்ற நோய்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம். சுகாதாரப் பொது விதிகளை கடைபிடிக்க வேண்டும். தும்மும் போதும் இருமும் போதும் மூக்கையும் வாயையும் கைக்குட்டையை உபயோகித்து மூட வேண்டும். அல்லது இரு கைகளாலும் அல்லது முழங்கையின் உட்பகுதியாலும் மூடலாம். முகக் கவசத்தை நோயாளி அல்லது பராமரிப்பவர் பயன்படுத்தலாம் நோய் பரவும் காலங்களில் அதிக சனக்கூட்டங்களுக்குச் செல்வதை தவிர்ப்பது நல்லது. அவ்வாறு செல்லும் போது முகக்கவசத்தை அணிய வேண்டும். கை, முகம் என்பவற்றை அடிக்கடி சவர்க்காரம் இட்டு கழுவ வேண்டும். அநாவசியமாக கண், மூக்கு, வாய் பகுதிகளை தொடுவதைத் தவிர்க்க வேண்டும். முடிவாக சீன வைரஸ் என்பது ஒரு புதிய வைரஸ் அல்ல அது கொவிட்- 19 போல் ஒரு பெரும் தொற்றை ஏற்படுத்தப் போவதும் இல்லை. இது மரணத்தை ஏற்படுத்தும் சந்தர்ப்பம் மிகக் குறைவாகும். எனவே இதைப்பற்றி நினைத்துப் பதற்றப்படாமல் நாம் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்து சுவாசத் தொகுதி சம்பந்தமான நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவோம்.

Dr.S கேதீஸ்வரன்,
பொது வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசியல் கைதிகளை உறவுகளுடன் இணையுங்கள்

## சிறிநேசன் எம்.பி வலியுறுத்து

(மட்டக்களப்பு)

கடந்த ஆட்சிக்காலத்தில் படுகொலையாளிகள் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டிருந்த நிலையில், தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடியவர்களை ஏன் விடுதலை செய்யக்கூடாது என மட்டக்களப்பு மாவட்ட இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் கேள்வியெழுப்பியுள்ளார்.

போராளிகள் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு பிரதான பேருந்து நிலையத்தில் நேற்று இடம்பெற்ற கையெழுத்து போராட்டத்தின் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், 'பல ஆண்டுகளாக சிறையில் வாடிக் கொண்டிருக்கின்ற, எமது விடுதலைக்காக போராடிய தமிழ் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்கிற அறவழிப் போராட்டத்தினை தற்போது முன்னெடுத்திருக்கின்றனர்.

பயங்கரவாத தடைச் சட்டம் எனும் பெயரில் மிக மோசமான, மனித குலத்துக்கு எதிரான சட்டம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

இதன் மூலம் அப்பாவிகளை கூட பயங்கரவாதிகள் என்ற பார்வைக்கு உட்படுத்தப்படும் மிக மோசமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டது.

தற்போது ஆட்சிக்கு வந்த அரசாங்கம் இந்த சட்டத்தினை நீக்குவோம் என்னும் உத்தரவாதத்தை அளித்தும் கூட இன்னும் அந்த பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படவில்லை.

இந்நிலையில் இந்த கொடிய பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் எமது பத்து தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் விரைவாக விடுதலை செய்யப்பட வேண்டும்.



இவர்கள் நீண்டகாலமாக சிறைச்சாலையில் நாட்களை கழித்துவிட்டார்கள்.

இருக்கும் காலத்திலாவது தமது உறவுகளுடன் இணைந்து வாழ்வதற்கு மாற்றத்தினை உருவாக்கப்போவதாகக் கூறும் புதிய அரசாங்கம் அதனை செய்யவேண்டும்' என அவர் தெரிவித்துள்ளார். (நி)

# தென்னைச் செய்கையாளர்களுக்கு காசோலைகள் வழங்கி வைப்பு

(தருமபுரம்)

தென்னை பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் முகமாக கண்டாவளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட 44 செய்கையாளர்களுக்கு ஒரு தென்னைக்கு 100 ரூபாய் வீதம் காசோலைகள் வழங்கும் நிகழ்வானது கடந்த வியாழக்கிழமை புளியம்பொக்கணை கமநலசேவை நிலையத்தில் நடைபெற்றது.

205,200 ரூபாய் பெறுமதியான காசோலை வழங்கப்பட்டதுடன் 7 பயனாளிகளுக்கு கப்ருக்க திட்டத்தின் மூலம் கடனுக்கான காசோலையும் வழங்கப்பட்டது.

காசோலைகளை தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் உதவிப் பொது முகாமையாளர் தேவராஜா வைகுந்தன் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் பிராந்திய முகாமையாளர் ஈ.சற்குணன், கண்டாவளை பிரதேசத்திற்குரிய தென்னை பயிர்ச் செய்கை சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.ஜெயேந்திரா ஆகியோர் கலந்து கொண்டனர். (8-316)

# கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம் முன்பாக அமைதியின்மை



(முறிகண்டி)

கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம் முன்பாக அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

குறித்த துயிலுமில்லத்தை நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்பதற்காக மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பக தரப்புகள் முனைந்த போது குறித்த அமைதியின்மை ஏற்பட்டுள்ளது. (8-100-316)

# 167,000 மெட்ரிக் தொன் அரிசி இதுவரை இறக்குமதி

## இலங்கை சுங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் அரிசியை இறக்குமதி செய்ய அனுமதித்ததன் பின்னர் 167,000 மெட்ரிக்தொன் அரிசி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கம் அறிவித்துள்ளது.

இதில் 66,000 மெட்ரிக் தொன் சிவப்பு அரிசியும் 101, 000 மெட்ரிக் தொன் புழுங்கல் அரிசியும் உள்ளடங்குவதாக சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலி அருக்கொட தெரிவித்தார்.

அரிசியை இறக்குமதி செய்வதற்கான காலக்கெடு நிறைவடைந்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் 4 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை அரிசியை இறக்குமதி செய்ய தனியார் துறைக்கு அரசாங்கம் முதலில் அனுமதியளித்தது.

அதற்கு முன்னர் டிசம்பர் 24 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் காலக்கெடுவை மீண்டும் ஜனவரி 10 ஆம் திகதி வரை நீடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# விசேட பூஜைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் தைப்பொங்கலை முன்னிட்டு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு விஷேட பூஜைகள் நடைபெறும் என பிரதமகுருக்கள் சிவஸ்ரீ து. விவேகானந்தக் குருக்கள் அறியத்தருகிறார். (நி)


லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (3554)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : 00919566156719

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.

077 [illegible]



யாழ் மாபெரும் உயர்கல்விக் கண்காட்சி

JAFFNA EDUCATION FAIR 2025

Your Future Begins Here...

5TH EDITION

- வெற்றிகரமாக ஐந்தாவது ஆண்டாகவும் யாழ்ப்பாணத்தின் மிகப்பெரிய உயர் கல்விக் கண்காட்சி
- உலகின் சிறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் உள்ளூர் உயர்கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகளை நேரில் சந்திக்கலாம்
- A/L 2024 உயர்தர பர்ட்சை முடிந்துவிட்டு அடுத்த கட்டத்தை நோக்கி நகரும் உங்களுக்கு சிறந்த தெரிவுகள்.
- நீங்கள் வெளிநாட்டில் குடிபெயர அல்லது உயர் கல்வியை தொடர திட்டமிட்டிருந்தால், உங்களுக்கு சிறந்த களம்
- இலவச புலமைப்பரிசில்கள்
- உடனடி அனுமதிகளுக்கு சிறப்பு தள்ளுபடிகள் என இன்னும் பல சலுகைகள்.



11th & 12th JANUARY 2025

9.00 am to 5.00 pm

அனுமதி இலவசம்

VALAMPURI HOTEL JAFFNA

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!!

PLATINUM SPONSOR A·P·I·I·T StudyGlobal GOLD SPONSOR BCAS CAMPUS NORTHERN UNI NEW ZEALAND FUTURE CENTRE ESOFT METRO CAMPUS SILVER SPONSOR SCOT CAMPUS FOX RESORT ICS OFFICIAL RADIO PARTNER PRINT MEDIA PARTNER வலம்புரி SUPPORTED BY ORGANIZED BY EVOLUTION DIGITAL MEDIA PARTNER SAKSITV

விபரங்களுக்கு அழையுங்கள் 0775656633 0722600620


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறீன்லாந்திற்கு எதிராக படைபலத்தை பிரயோகிக்க முயலவேண்டாம்

(வோஷிங்டன்)

**கிறீன்லாந்தினை அமெரிக்காவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கு வரிகள் அல்லது படைபலத்தை பயன் படுத்துவேன் என ட்ரம்ப் தெரிவித்துவரும் நிலையிலேயே ஜேர்மனியும் பிரான்ஸும் இது குறித்து ட்ரம்பை எச்சரித்துள்ளன.**

அவசர அவசரமாக தொலைக்காட்சி அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ள ஜேர்மனியின் சான்சிலர் ஒலாவ் ஸ்கோல்ஸ் ட்ரம்பின் கருத்துக்கள் ஐரோப்பிய தலைவர்கள் மத்தியில் தெளிவின்மையை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.


எல்லைகளை மீற முடியாது என்ற கொள்கை ஒவ்வொரு நாட்டிற்கும் பொருந்தும் என குறிப்பிட்டுள்ள அவர் கிழக்கிலோ மேற்கிலோ எங்குள்ள நாடாக இருந்தாலும் எந்த நாட்டிற்கும் இது பொருந்தும் என குறிப்பிட்டுள்ளார்.

சிறிய நாடு மிகப்பெரிய நாடு என்பதற்கு அப்பால் ஒவ்வொரு நாடும் இதனை மதிக்கவேண்டும் என ஜேர்மனியின் சான்சிலர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரான்ஸின் வெளிவிவகார அமைச்சர் ஜீன் நோயல் பரோட் சர்வதேச சட்டங்களை பாதுகாப்பதில் ஐரோப்பா என்றும் உறுதியாகயிருக்கும் என தெரிவித்துள்ளார்.

உலகின் வேறு எந்த நாடும் அது எந்த நாடாகயிருந்தாலும் தனது சுதந்திர எல்லைகளை தாக்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் அனுமதிக்காது எனவும் அவர் தெரிவித்துள்ளார். அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள டொனால்ட் ட்ரம்ப் பனாமாகால்வாயையும் கீறின்லாந்தையும் கைப்பற்றப் போவதாக மீண்டும் தெரிவித்துள்ளார். (நி)

# மோடி பிரான்ஸ் விஜயம்



(டில்லி)

பிரதமர் மோடி அடுத்த மாதம் பிரான்ஸ் நாட்டிற்கு பயணம் மேற்கொள்ள உள்ளார். அடுத்த மாதம் 11 ஆம் திகதி பிரான்ஸ் செல்லும் பிரதமர் மோடி பாரிசில் நடைபெற உள்ள செயற்கை நுண்ணறிவு மாநாட்டிலும் பங்கேற்கிறார்.

இந்த பயணத்தின்போது பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோனை பிரதமர் மோடி சந்திக்கிறார். இந்த சந்திப்பின்போது இரு நாட்டு உறவு உட்பட பல் வேறு விவகாரங்கள் குறித்து இருநாட்டு தலைவர்களும் ஆலோசனை நடத்த உள்ளனர்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பிரேசிலில் நடைபெற்ற ஜி20 மாநாட்டில் இருநாட்டு தலைவர்களும் சந்தித்தனர். அதன்பின்னர் 4 மாதங்களுக்குபின் இரு நாட்டுத் தலைவர்களும் சந்திக்க உள்ளனர். பிரதமர் மோடியின் பிரான்ஸ் பயணம் குறித்து அதிகாரப் பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர் பார்க்கப்படுகிறது. (நி)

# பதவியேற்பிற்கு முன் புடினை சந்திக்கிறார் ட்ரம்ப்



ரஷ்ய ஜனாதிபதியுடன் ஒரு சந்திப்பினை மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்துள்ளதாக அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

சந்திப்பு குறித்த திகதி மற்றும் இடம் இன்னும் உறுதிப்படுத்தப்படாத நிலையில், ஜனவரி 20 ஆம் திகதி பதவியேற்பதற்கு முன்னதாக இந்த சந்திப்பு இடம் பெறும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

கடந்த நவம்பர் தேர்தலில் வெற்றி பெற்ற ட்ரம்ப், ஜனாதிபதியாக பதவியேற்றவுடன் உக்ரைனில் போரை முடிவுக்கு கொண்டு வர பேச்சுவார்த்தை நடத்துவதாக உறுதியளித்தார்.

இந்த நிலையில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான சாத்தியமான தீர்வுகளைப் பற்றி விவாதிக்க ட்ரம்புடன் ஒரு சந்திப்பினை கோரியிருந்தார்.

அதற்கு இணங்க இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளது.

2022 பெப்ரவரி முதல் ரஷ்யப் படையெடுப்பின் கீழ் இருக்கும் உக்ரைனில் அமைதியை நிலை நாட்டுவதற்கான பிரசார வாக்குறுதிகளை ட்ரம்பின் கருத்துக்கள் வெளிக்காட்டுகின்றன.

எனினும், பதவியேற்கும் ஜனாதிபதி இன்னும் உறுதியான போர்நிறுத்தம் அல்லது சமாதான ஒப்பந்த முன்மொழிவுகளை கோடிட்டுக் காட்டவில்லை.

ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகத்தின் கீழ் உக்ரைனுக்கு அனுப்பப்பட்ட அமெரிக்க இராணுவ உதவியை ட்ரம்ப் தேர்தல் பிரசாரம் முழுவதும் விமர்சித்தார்.

மேலும், நேட்டோவில் அமெரிக்காவின் தொடர் ஈடுபாடு குறித்து சந்தேகம் தெரிவித்தார்.

எவ்வாறெனினும், 2022 பெப்ரவரி முதல் $65 பில்லியனுக்கும் அதிகம் பெறுமதியான இராணுவ உதவிகளை வழங்கிய வோஷிங்டன், போரின் போது உக்ரைனின் மிகப் பெரிய ஆதரவாளராக இருந்து வருகிறமை சுட்டிக் காட்டத்தக்கது. (நி)

### ட்ரம்பின் பதவியேற்பிற்காக

# 1 மில். அமெரிக்க டொலர் வழங்கிய கூகுள் நிறுவனம்



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ட்ரம் கட்சியின் பயனரான டொனால்ட் ட்ரம்ப் அதிக வாக்கு வித்தியாசத்தில் அமோக வெற்றி பெற்றார்.

அவர் வருகிற 20 ஆம் திகதி அமெரிக்காவின் ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ளார்.

ட்ரம்பின் பதவியேற்பு விழா அமெரிக்க பாராளுமன்றத்தில் பிரமாண்டமாக நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் மும்மரமாக நடந்து வருகின்றன.

இந்த நிலையில் ட்ரம்பின் பதவியேற்பு விழாவுக்கான நிதியை அமெரிக்க நிறுவனங்கள் வாரி வழங்கி வருகின்றன. அந்த வகையில் கூகுள் நிறுவனம் ட்ரம்பின் பதவியேற்பு விழாவுக்காக 1 மில்லியன் அமெரிக்க டொலரை நன்கொடையாக வழங்கியுள்ளது.

இதேபோல உலகப் புகழ் பெற்ற விமான தயாரிப்பு நிறுவனமான போயிங் நிறுவனமும் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடையளித்துள்ளது. (நி)

# லொஸ் ஏஞ்சல்ஸ் நகரை காவு கொள்ளும் தீப்பரவல்!

### உயிரிழப்பு எண்ணிக்கை 10 ஆக அதிகரிப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்க லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் பரவிய காட்டுத் தீயில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆக உயர்ந்துள்ளது என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

வேகமாக நகரும் தீப்பிழம்புகள், கடுமையான வறண்ட காற்றால் தூண்டப்பட்டு, வீடுகள் மற்றும் வணிகங்களை தீக்கிரையாக்கியுள்ளன.

பிரபலங்கள் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கான மக்கள் புகை மூட்டப்பட்ட குடியிருப்புகளிலிருந்து வெளியேற கட்டாயப்படுத்தப்பட்டனர்.

காட்டுத் தீ தொடர்ந்து எரிந்து வருவதால், லொஸ் ஏஞ்சல்ஸ் கவுண்டியின் மருத்துவ பரிசோதகர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இறந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆக உயர்ந்துள்ளதாக தெரிவித்தார்.

மீட்பு பணிகள் தொடர்வதால் எண்ணிக்கை உயரும் என்று அதிகாரிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளையிட விரும்புபவன் முதலில் பணிவதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும். ~ அரிஸ்ரோட்டில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரச நிர்வாகத்தை நடத்த முடியாமல் போகும்

ஒரு காலத்தில் அரச நிர்வாகம் என்பது அரச உயர் அதிகாரிகளின் கைகளில் இருந்தன.

உதாரணத்துக்கு மாவட்ட செயலாளர்கள் குறித்த மாவட்டத்தின் தேவைக்கேற்ப தீர்மானங்களை எடுப்பர். அந்தத் தீர்மானங்களுக்கு ஏனைய அரச பணியாளர்கள் கட்டுப்படுவர்.

இதேபோல கல்வித் திணைக்களங்களும் மாநிலக் கல்விப் பணிப்பாளர்களின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன.

உதாரணத்துக்கு வட மாநிலக் கல்விப் பணிப்பாளராக இருந்த இரா.சுந்தரலிங்கம் அவர்கள் வட மாநிலத்தின் கல்வி சார் விடயங்கள் முழுவதையும் கவனித்து வந்தார்.

யுத்த காலங்களிலும் வட மாகாணத்தில் பொதுப் பரீட்சைகளை நடத்துவதில் அவர் ஆற்றிய பணி மறத்தற்குரியதன்று.

உண்மை. வட மாநிலக் கல்விப் பணிப்பாளராக இருந்த இரா.சுந்தரலிங்கம் அவர்கள் அப்போதைய கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலியை அடிக்கடி சந்தித்து வட மாகாணத்தின் கல்விசார் தேவைகளை நிறைவு செய்து வந்தார்.

காலத்தின் அசைவில், அப்போதைய நிர்வாக நடைமுறைகள் இல்லாது போக, இப்போது மாகாணம், வலயம், கோட்டம் என்ற நிர்வாகக் கட்டமைப்பு கல்விப் புலத்தில் உருவாகிற்று.

இந்த நிலைமை ஏற்பட்டதன் பின்னர், அந்தந்தப் பதவிகளுக்கு ஆளணியை நியமிப்பதிலேயே போதுமென்றாகிவிடுகிறது.

இதுபோலவே மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், அரச அதிபர்கள், மேலதிக அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள் மற்றும் இலங்கை நிர்வாக சேவைக்குட்பட்டவர்கள் பதவி வகிக்கக்கூடிய திணைக்களங்கள் அனைத்துக்கும் ஆளணியை நியமிப்பதிலேயே குழப்பங்களும் குளறுபடிகளும் ஏற்பட்டு விடுகின்றன.

ஆம், அரச நிர்வாகத்தை இம்மியும் நகர்த்த முடியாத அளவில் முறைப்பாடுகளும் சமூகவலைத்தளங்களில் நடக்கின்ற விமர்சனங்களும் நிலைமைகளை மிகவும் இறுக்கமாக்கியுள்ளன.

இதுதவிர, அரச உயர் அதிகாரிகளை அங்கு பணி புரிகின்ற உத்தியோகத்தர்கள் முகநூல்களில் விமர்சிக்க முடியும் எனும் சூழ்நிலை ஏற்பட்ட போது, நிர்வாகக் கட்டமைப்பு சீர்குலைந்து சின்னாபின்னமாகிப் போவது தவிர்க்க முடியாததே.

ஆக, எதிர்காலத்தில் அரச உயர் பதவிகள் வேண்டாம் என்று புறந்தள்ளி விடுகின்ற அளவுக்கு நிலைமை வந்துவிடும்.

அதன் அறிகுறிகள் இப்போது தென்படுகின்றன.

இந்த அறிகுறிகளில் ஒன்றுதான் பதில் என்ற நியமனத்தோடு எமது பிரதேசத்து அரச நிர்வாகம் நகர்த்தப்படுகின்ற நிலைமையாகும்.

# முல்லைக்கடலை சூறையாடும் இந்திய இழுவை மடிப் படகுகள்

## நாட்டின் கடல் வளம், மீனவர்களது வாழ்வாதாரம் என்பன அழிவின் விளிம்பில்

முல்லைத்தீவுக் கடலை இந்திய இழுவைப்படகுகள் தற்போது ஆக்கிரமித்து எங்கள் வளங்களைச் சூறையாடிச் செல்வதாக மாவட்ட கடற்தொழிலாளர் சம்மேளனத் தலைவர் ம.அலெக்ஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் முல்லைத்தீவு மாவட்டக் கடலில் இந்திய இழுவைப் படகுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதனால் எமது கடற்றொழிலாளர்கள் பெரும் சிரமத்தினை எதிர் நோக்கியுள்ளார்கள்.

பகலில் தூரத்தில் நிற்கும் இந்திய இழுவைப் படகுகள் இரவு நேரங்களில் கரையிலிருந்து ஒன்றரைக் கிலோமீற்றர் தூரம்வரை வருகின்றார்கள்.

இந்திய இழுவைப்படகுகள் வருகை தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியுள்ளதுடன் கடற்தொழில் அமைச்சருக்கும் தெரியப்படுத்தியுள்ளோம்.

முல்லைத்தீவு மாவட்டக் கடலில் இப்போது தான் கடற்றொழில் பருவம். அத்தோடு இறால் பிடிக்கும் பருவமும் தொடங்கியுள்ளது. இந்தநிலையில் இந்திய இழுவைப்படகினால் எங்கள் வளமும் தொழிலும் பாதிக்கப்படுகின்றது.

இந்தத் தொழிலுக்காக எங்கள் கடற்றொழிலாளர்கள் வங்கிகளில் கடனினை எடுத்தும் நகைகளை அடைவு வைத்துள்ளனர். இன்று (நேற்று) அதி காலை கடற்தொழில் அமைச்சரிடம் நான் முறையிட்டபோது அவர் தான் தற்போது இந்தியாவிலேயே நிற்பதாகவும் இது குறித்து தான் இந்திய அதிகாரிகளுடன் கதைப்பதாகவும் உறுதியளித்துள்ளார்.

இந்தியப் படகுகளால் எங்கள் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எனவே இந்திய இழுவைப்படகினை முற்றுமுழுதாக அரசாங்கம் தடைசெய்து தர வேண்டும் எனறார். (ம-7)

## காலவரையின்றி மூடப்பட்டது பிக்குகள் பல்கலைக்கழகம்

அநுராதபுரம் பிக்கு பல்கலைக்கழகம் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது.

பிக்கு மாணவர்கள் முன்னெடுத்துள்ள உணவுத் தவிர்ப்புப் போராட்டம் காரணமாகப் பல்கலைக்கழக நிர்வாகம் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

பகிடிவதைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் 10 சிரேஷ்ட பிக்கு மாணவர்களுக்கு வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த வகுப்புத் தடையை நீக்குதல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 7 ஆம் திகதி முதல் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கோப் குழுவுக்கான தலைவர் தெரிவு மரபுக்கு முரணானது

### கோப் குழுவைப் புறக்கணித்தது ஐ.ம.சக்தி

(கொழும்பு)

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவை (COPE) புறக்கணிக்கப் பிரதான எதிர்க் கட்சியாகிய ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளதாக அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித்பி.பெரேரா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றக் குழுவுக்கு உறுப்பினர்களை நியமிப்பதில் பாரம்பரிய நடைமுறைகள் மீறப்பட்டதால் இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டதாக அவர் குறிப்பிட்டார். (ம-7)

## துப்பாக்கிகளை மீளளிப்பதற்கான கால அவகாசம் நீடிக்கப்படாது

### பாதுகாப்பு அமைச்சு

(கொழும்பு)

தனிநபர்களுக்குத் தற்காப்புக்காக வழங்கப்பட்டுள்ள துப்பாக்கிகளை மீள ஒப்படைப்பதற்காக வழங்கப்பட்ட கால அவகாசம் எந்தவிதத்திலும் நீடிக்கப்படாது என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

எனவே தனிப்பட்ட பாதுகாப்புக்காகப் பொலிஸ் மற்றும் இராணுவத்தினரிடமிருந்து அனுமதிப்பத்திரத்துடன் பெற்றுக்கொண்டுள்ள அனைத்துத் துப்பாக்கிகளையும் இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னதாக ஒப்படைக்குமாறு பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறு துப்பாக்கிகளை ஒப்படைக்காமல் தம்வசம் வைத்திருக்கும் நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

### கோட்டா அரசு நிறுத்திய

## ஓய்வூதியத் திட்டத்தை மீள ஆரம்பித்தது அநுர அரசு

(கொழும்பு)

2020ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்தால் இரத்துச் செய்யப்பட்ட ஓய்வூதியச் சம்பள அதிகரிப்பு நடைமுறையை மீண்டும் அமுல்படுத்த தற்போதைய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

2016 ஜனவரி முதலாம் திகதி முதல் 2019 டிசம்பர் 31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்காகவும் குறித்த ஓய்வூதியச் சம்பள அதிகரிப்பு பெற்றுக்கொடுக்கப்படும் எனவும் எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படும் எனவும் தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## பரீட்சைக்கு முன்னரே கசிந்த வினாத்தாள்கள்

### விசாரிக்க குழு நியமனம்

வடமத்திய மாகாணத்தில் 11 ஆம் வகுப்புத் தவணைப் பரீட்சை வினாத்தாள்கள் மூன்று தேர்வுக்கு முன்னதாகவே கசிந்ததாகக் கூறப்படும் சம்பவம் குறித்து விசாரிக்க குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

மாகாணக் கல்விச் செயலாளரின் உத்தரவின் பேரில் அமைக்கப்பட்ட குறித்த குழு 5 உறுப்பினர்களைக் கொண்டுள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், சம்பவம் தொடர்பாக சிறப்புத் தணிக்கையை தொடங்க மாகாண கல்விச் செயலாளர் சிறிமேவன் தர்மசேன அறிவுறுத்தியுள்ளார்.

இதற்கிடையில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வடமத்திய மாகாண தரம் 11 பரீட்சையை எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் மீண்டும் நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு தற்போது அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

### வேகமானிகளைப் பயன்படுத்தி

## அதிவேக சாரத்தியத்தை தடுக்க விஷேட திட்டம்

(கொழும்பு)

அதிக வேகத்துடன் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளை அடையாளம் காண 91 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான வேகமானிகள் பொலிஸ் போக்குவரத்து உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதற்கான நிகழ்வு பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த விஜேசூரியவின் தலைமையில் நேற்று முற்பகல் பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்றது.

அதன்படி அதன் முதற்கட்டமாக நீர்கொழும்பு, களனி, கம்பஹா ஆகிய பொலிஸ் பிரிவுகளுக்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கும், மேல் மாகாணத் தெற்குப் போக்குவரத்துப் பிரிவுப் பணிப்பாளருக்கும் அமெரிக்க தயாரிப்பிலான குறித்த வேகமானிகள் வழங்கப்பட்டுள்ளன. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இலுப்பைக் கடவை பரங்கிகமம் பகுதியில் விவசாயிகளால் முன்னெடுக்கப்பட்ட தமிழர் உணவுப் பண்பாட்டியல் தொடக்க விழாவான அறுவடை விழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (படம்: ஜோசப்நயன்)

## ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதி மன்ற வளாகத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணிக்கு 87 டிப்பர் மணல் ஏல விற்பனை செய்யப்படவுள்ளது எனவும் ஏல விற்பனைக்கான பொருட்களை ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலம் முன்பாக பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிடலாம் எனவும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதி மன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (8)



பெண்கள் வாழ்வுரிமைச்சங்கத்தின் 7 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வும் வருடாந்த பொதுக்கூட்டமும் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் அமைந்துள்ள தனியார் விருந்தகத்தில் நடைபெற்றது. குறித்த நிகழ்வில் சிறுதொழில் முயற்சியாளர்களும் கௌரவிக்கப்பட்டனர். (படம் தேவானந்தன்)



# எனது 34 ஆண்டுகள் ஆன்மீகப் போராட்டப் பாதையிலே....
# சோழியபுரம் பத்ம வெளியீடு

## கிளீன் சிறிலங்கா வேலைத் திட்டத்திலே...

## பொங்கலோ! பொங்கல்!! கிளீன் பொங்கல்!!!

எனது இனிய பொங்கல் வாழ்த்துக்களுடன் என் அன்பு உள்ளங்களே!

பண்டைத் தமிழர் பண்பாடு கலை, கலாசாரம் பேணப்படும் ஒரு முக்கிய நிகழ்வாகவும் உழவர் திருநாளாகவும் இவ்விழா கொண்டாடப்படுகின்றது. உலக இயக்கத்திற்கு முக்கிய காரணமாக கண்கண்ட தெய்வமாக இயற்கைத் தெய்வமாக விளங்கும் சூரிய பகவானுக்கு இல்லங்கள் தோறும் புதிய மண்பானையில் தூய மனதுடன் அரிசி கொண்டு பொங்கல் படைத்து பூசை வழிபாடுகள் செய்து நன்றிக் கடன் செலுத்தும் விசேட தமிழர் தினமாகும்.

எனவே தமிழர் திருநாளாம் தைப்பொங்கலன்று தமிழ் மக்களைப் பீடித்துள்ள பாவ, கர்ம தோசங்கள் நீங்கி புதுயுகம் மலர்ந்திட தமிழர்கள் இம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ பொங்கிப் படைத்துப் பலன் பெறுவோமாக.

மேலும் 03.11.2024 வலம்புரிப் பத்திரிகையில் ஐயா கூறிய விடயத்தை சற்று சிந்திப்போம். அனைத்து ஜே.வி.பி தோழர்களே! என்னும் தலைப்பில் அன்றைய தலைவர் தோழர் விஜேவீர அவர்களின் தமிழர் பற்றிய நிலைப்பாடு இந்நாட்டில் வாழுகின்ற சிங்கள மக்களைப் போன்று தமிழ் மக்களும் சம உரித்து உடையவர்கள். தமிழினத்திற்கு சுயநிர்ணய உரிமை உண்டு. விரும்பினால் சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழலாம். விரும்பாவிட்டால் தமிழினத்திற்கு பிரிந்து வாழும் உரிமையும் உண்டு என்று கூறியதையும் சிங்கள மக்களின் நிலைப்பாட்டையும் ஐயா வெளிப்படுத்தியதுடன் இப்படியான தன்னலமற்ற தலைவனுக்கு தமிழர்கள் செய்யும் கைமாறு தான் என்ன? ஜே.வி.பி தோழர்களே நீங்கள் தமிழர்களுக்குச் செய்யும் கைமாறு தான் என்ன? என்று கேட்டிருந்தேன். தமிழ் மக்களுக்கு ஈசுர விநாயகரின் குரல் நன்றாகக் கேட்டதினாலே ஜே.வி.பி. தோழர்களுக்கு கடந்த பாராளுமன்றத் தேர்தலில் வரலாறு காணாத கனதியான கைமாற்றைச் செய்து விட்டார்கள். ஆனால் ஜே.வி.பி தோழர்களுக்கு ஈசுர விநாயகரின் குரல் கேட்கவில்லை போலும் செய்வதறியாது தடுமாறி நிற்கின்றார்கள். இதை ஈசுர விநாயகரே பார்த்துக் கொள்ளுவார். பயப்படத் தேவையில்லை. யாவற்றையும் பொறுத்திருந்து பார்ப்போம்.

எனவே தான் இப்பொங்கல் விழாவைத் தற்போது நாட்டில் பேசு பொருளாகச் சொல்லப்படுகின்ற கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்திலே உள்வாங்கி நீண்ட காலத் தமிழர் இனப்பிரச்சினைக்கு உடன் அரசியல் தீர்வைக் காண வலியுறுத்தி ஜே.வி.பி உட்பட சிங்கள மக்கள் அனைவருக்கும் ஒரு மனமாற்றம் ஏற்பட வேண்டி கண்கண்ட தெய்வமாம் சூரியபகவானுக்கு அனைத்து தமிழ் மக்களும் புதுப்பானையில் தூய (கிளீன்) பொங்கல் அரிசியிட்டு பொங்கிப் படைத்து சிவசூர்யாசனாய நம: சிவசூர்யமூர்த்தியே நம: சிவசூர்யாய நம: என்ற மந்திரத்தை 3 முறை உச்சரித்து சூரிய பகவானை வணங்கி பலனைப் பெற்றுக் கொள்வோமாக:

தமிழர் இனப்பிரச்சினை விடயத்தில் அனைத்து சிங்கள மக்களின் புறத்தூய்மையை விட அகத்தூய்மையே மிக மிக முக்கியம் இதை பெற்றுக் கொள்வதற்காகவே இப்புதிய கிளீன் பொங்கல் வழிபாடு

புறத்தூய்மை நீரால் அமையும் அகத்தூய்மை வாய்மையாற் காணப்படும் என்றவாறு தேர்தல் களத்தில் பொது மக்களுக்கு கூறிய வாக்குறுதிகளையே தற்போது தமிழ் மக்கள் எதிர்பார்த்து நிற்கின்றனர் என்பதை அனைத்துச் சிங்கள மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

தமிழர் தாயகத்தின் நாயகரே!

கண்ணைக் கொத்திக் காக்காப் பிள்ளையாரே!

மக்கள் எல்லோரும் உமது திருவிளையாடல்களை எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றார்கள். தாமதம் வேண்டாமப்பா விரைவாகச் செய்திடுவீர் அல்லும் பகலும் அனைவரும் உம்மை நினைக்கின்றோம். துதிக்கின்றோம். இன்னும் தாமதம் ஏனப்பா? தமிழ் மக்களே! உங்கள் ஈசுர விநாயகன் வந்து விட்டேன் என்று கூறியருளி சங்கடகர சதுர்த்தித் தினத்திலே தேர்தலை நடத்தியது மட்டுமல்ல உங்கள் பிரச்சினையைத் தீர்த்துத் தான் இருப்பேன் என்று கூறியதற்கு என்றுமில்லாதவாறு ஆட்சி மாற்றத்தையும் கொண்டு வந்து மக்கள் எல்லோரையும் ஆறு மனமே ஆறு இந்த ஈசுர விநாயகனின் கட்டளை ஆறு என்று ஆறுதல்படுத்தினீரே இன்னும் தாமதம் ஏனப்பா?

இனிமேல் இது தான் எங்கள் வாழ்க்கையா? இல்லை இல்லை மனிதன் தன்னால் முடியும் என்றால் இறைவன் எதற்கு? மனித சக்தியை ஆட்டிப் படைப்பது தெய்வீக சக்தி கடந்த மாதங்களில் இயற்கை அனர்த்தத்தால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, புயல் மண்சரிவு வெள்ளம் காரணமாக இடம்பெயர்வு உயிரிழப்புக்கள் சொத்து இழப்புக்கள் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு துன்பம் அடைந்தனர். இது ஒரு தெய்வ தண்டனை என்பதை உணர்வோமாக தெய்வ தண்டனை 2 வகை 1. மனிதனுக்கு மனிதன் மூலம் கொடுப்பது 2. மனிதனுக்கு இயற்கை மூலம் கொடுப்பது (அனர்த்தம், அழிவுகள்) ஆனால் எதற்கும் ஓர் எல்லை உண்டு எல்லை தாண்டினால் வாழ முடியாது மக்கள் அவதிப்பட நேரிடும்.

இவ்வாறாக இயற்கை அனர்த்தத்தாலும் செயற்கை அனர்த்தத்தாலும் இனிவரும் (தை, மாசி) மாதங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக எமது தேவஸ்தானத்திலே கடந்த 5 ஆம் திகதி பிள்ளையார் கதை முடிவு நாளிலே வருமுன் காப்போனாகிய ஈசுர விநாயகப் பெருமானுக்கு விசேட அபிஷேக பூஜை வழிபாடுகள் பிரார்த்தனைகள் யாவும் நடைபெற்றன என்பதை அனைத்து மக்களுக்கும் அறியத் தருகின்றேன். இவர் திருப்பாதம் போற்றி! போற்றி!! போற்றி!!!

**சோழியூரான் பிறைசூடிக்குரு,**
**(ஆன்மிகவாதியும் சந்ததிப் பூசகரும் பரம்பரை பரிபாலகரும்)**

(3000)

# ஐந்து தேரும் வீதி வலம் வருவதை இன்று 12.01.2025
# பூசலார் நாயனார் மனத்தினால் அமைத்து திருப்பணி செய்ததொண்டை
# நாமும் ஈழத்துச் சிதம்பரம் ஆலயத்தில் அவர் காட்டிய வழியில் தரிசிப்போம்

நடமாடும் ஓங்கும் ஒளி வெளியே நின்று உலகு தொழு நடமாடும்
தேங்கமமும் பொழில்தில்லைத் திருச்சிற்றம்பலம் போற்றி

உமாபதி சிவாச்சாரியார்.

வளமார்ந்த தில்லைச் சிற்றம்பலத்தில் இறைவன் நிகழ்த்தி அருளும் அற்புதத் திருக்கூத்து உலக வாழ்க்கையில் மக்களுக்கு நேரும் அச்சத்தை அகற்றி ஆனந்தம் நல்குதல் பொருட்டே நிகழ்வது.

சிற்றம்பலத்தில் ஆடல்புரியும் கூத்தப் பெருமான் ஆயிரங்கால் மண்டபத்தே எழுந்தருளச் செய்து மீண்டும் சிற்றம்பலமாகிய ஞானமன்றத்தே புகுந்தருளச் செய்யும் இத்திருவிழா நிகழ்ச்சியானது, மன்னுயிர்களின் நெஞ்சத்தாமரையில் உயிர்த் துடிப்பாக இடைவிடாது தடம்புரிந்தருளும் கூத்தப் பெருமானை நெஞ்சத்தினின்றும் எழுந்தருளச் செய்து, புருவ நடுவில் தியானித்து ஆறு ஆதாரங்களுக்கும் அப்பாற்பட்டதால் உச்சதந் தலைக்குமேல் பன்னிரண்டு அங்குலம் உயர்ந்து விளங்கும் மேலிடமாகிய ஆயிர இதழ்த்தாமரை மேல் எழுந்தருளும்படி செய்து, முதல்வனது திருவருளோடு ஒன்றியிருந்து அம்முதல்வனை மறுபடியும் நெற்றிக்கு நேரே புருவத்து இடைவெளியில் கண்டு போற்றி மீண்டும் நெஞ்சத் தாமரையில் எழுந்தருளச் செய்யும் சிவஞானச் செல்வர்களது அகப்பூசை முறையினை நினைவுபடுத்துவதாகும்.

சிவஞானச் செல்வர்களின் அகத்தே நிகழும் இத்திருக்கூத்துத் தரிசனத்தை உலக மக்கள் பலரும் புறத்தே கண்டு உய்தி பெறும் நிலையில் நிகழ்த்தப் பெறுவதே நடராசர் தரிசன விழாவாகும்.

தமிழகத்துச் சிதம்பரம் போன்று ஈழத்துச் சிதம்பரம் காரைநகர் ஆகும். சிதம்பரம் பாலாஸ்தானம் செய்தால் (48) நாற்பத்து எட்டு நாட்களில் கும்பாபிஷேகம் நடைபெறும். இந்த விடயம் இலங்கை வாழ் மக்கள் அனைவரும் சிந்தையில் இருந்து இங்கும் கும்பாபிஷேகம் நடாத்துவோம். பிரார்த்தனை செய்வோம்.

பூதல மேருப் புறத்தான தெக்கணம்
ஓதும் இடைபிங் கலைஒண் சுழுனையாம்
பாதி மதியோன் பயில்திரு அம்பலம்
ஏதமில் பூதாண்டது எல்லையின் ஈறே

திருமூலர்-2748

என்ற திருமூலர் திருவாக்குகள் தில்லையம்பலச் சீர்மையினைத் தெளிவாக்கும். முத்தித் தலங்களுள் முதலாவது உள்ளது சிதம்பரம்.அம்பலத்து எல்லை அம்பலம் ஆகும்.

அருள்மிகு ஐந்து தேரும் இவ்வருட இறுதியில் மார்கழியில் திருவீதி வலம் வர தில்லைக்கூத்தனையும் பூரண புட்கலை ஐயனாரையும் வணங்கிப் பிரார்த்திப்போம்.



**க.கு.க.சிவபாலன்**
**போசகர், ஈழத்துச் சிதம்பரம்,**
**மாணிக்கவாசகர் மடாலயம்.**

(சி-2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.நகரில்...

இதன்போது சந்தேக நபரிடமிருந்து 60 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

யாழில் நீண்டகாலத்தின் பின் கைப்பற்றப்பட்ட பெருந்தொகை ஹெரோயினாக இது கருதப்படுகிறது.

இந்நிலையில் கைதான சந்தேக நபரைத் தடுத்து வைத்து விசாரிக்கப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,33)

## அச்சுவேலியில்...

னர்.

இது தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-7)

## வட மாகாண...

யமுனா ராஜசீலன் - வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

இதேநேரம் வலிகாமம் வலய (பதில்) வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி லாவண்யா சுகந்தன் வடக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) பதவிக்கும் தற்போதைய வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளரான திருமதி அன்னமலர் சுரேந்திரன் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கல்வி நிர்வாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.முகுந்தன் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளராகவும் இடமாற்றப்பட்டுள்ளார். (ம-7)

## சுழிபுரத்தில்...

செய்யப்பட்டுள்ளான்.

கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ம-7)

## கசிப்புடன்...

கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7)

## இளவாலை...

தாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தியா ஊடாக ஐரோப்பா நோக்கிப் பயணிக்கும் நோக்கில் போலியான ஆவணங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்ததாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (ம-7)

## பெப்ரவரி மாதம்...

முதல் இறக்குமதி செய்யப்படும் அனைத்து வாகனங்களுக்கும் கலால் வரி சதவீதத்தை அரசாங்கம் அறிவித்துள்ளது.

நடைமுறைக்கு வரும் வகையில் இந்த கலால் வரி சதவீதங்களை வர்த்தமானியின் மூலம் நிதி மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி வெளியிட்டுள்ளார்.

அதன்படி, உற்பத்தி செய்யப்பட்ட நாளிலிருந்து 10 ஆண்டுகளுக்கு மிகாத பழைய வாகனங்களுக்கு 200 வீதம் மற்றும் 300 வீத கலால் வரிகள் விதிக்கப்பட்டுள்ளன.

சில வகை வாகனங்கள் அவற்றின் இயந்திர சிலிண்டர் திறன் மற்றும் கிலோவோட்களில் அளவிடப்படும் மோட்டார் சக்தியின் அடிப்படையில் கலால் வரிகளுக்கு உட்பட்டவை என்று அந்த வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## அநுரவின்...

பிங்கின் அழைப்பின் பேரில் எதிர்வரும் 14ஆம் திகதி சீனாவுக்கு விஜயம் மேற்கொள்ளும் இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சீனா ஜனாதிபதி ஸீ ஜின்பிங் உடன் கலந்துரையாடுவார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பிரதமர் லி கியாங் மற்றும் சீன தேசிய மக்கள் காங்கிரஸின் ஸாவோ லெஜி ஆகியோரையும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சந்திப்பார் என சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஹுவா சுன் யிங் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## வருவாயை...

ஐக்கிய குடியரசு முன்னணியின் காரியாலயத்தில் நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

சர்வதேச நாணய நிதியமே இன்று நாட்டை நிர்வகிக்கிறது. 4500 பில்லியனுக்கும் அதிகமான வருமானத்தை இந்த ஆண்டு திரட்டிக் கொள்ளுமாறு சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்துக்கு அறிவுறுத்தியுள்ளது.

இந்த வருவாயை வரிகள் ஊடாக திரட்டிக் கொள்ள அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகள் மீது வரிகளை விதித்தே 4500 பில்லியன் ரூபாய் வருவாயைத் திரட்டிக் கொள்ள முடியும்.

இதுவே உண்மை. நாட்டின் நிதி நிலைமை குறித்து மக்களுக்கு உண்மையைக் குறிப்பிடாமல் இருந்தால் கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்துக்கு ஏற்பட்ட கதியே இந்த அரசாங்கத்துக்கும் ஏற்படும்.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கத்திடம் நடைமுறைக்குச் சாத்தியமான கொள்கைத் திட்டங்கள் ஏதும் கிடையாது.

சர்வதேச நாணய நிதியம் முன்வைத்துள்ள 196 செயற்றிட்ட யோசனைகள் சிறந்தது. நட்ட மடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்க வேண்டும். நட்டமடையும் அரச நிறுவனங்களை நிர்வகிக்கும் பொறுப்பில் இருந்து அரசாங்கம் விடுபட வேண்டும்.

நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது தனியார் மயப்படுத்தலாக அமையாது. அரச நிறுவனத்தின் உரிமத்தை அரசு தனதாக்கிக் கொண்டு ஏனைய பங்குகளைத் தனியார் தரப்பினருக்கு வழங்க வேண்டும்.

தேசிய வளங்களைப்பாதுகாக்க வேண்டும் என்று போர்க் கொடி உயர்த்துபவர்கள் கடந்த காலங்களில்தேசியவளங்களைத் தனியார் மயப்படுத்துவதற்கு மறைமுகமாக ஆதரவு வழங்கியவர்கள்.

மின்கட்டணம் திருத்தம் தொடர்பில் இலங்கை மின்சார சபை முன்வைத்த முன்மொழிவு களை இலங்கை பொதுப் பயன் பாடு கள் ஆணைக் குழு புறக்கணித்துள்ளது.

மின் கட்டண திருத்தம் தொடர்பில் எதிர்வரும் 17 ஆம் திகதி தமது நிலைப்பாட்டை அறிவிக்க வுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு குறிப்பிட்டுள்ளது.

இலங்கை மின்சார சபை நிதி நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளது. கடந்த காலங்களில் மின்சார சபை இலாபமடைந்துள்ளது. ஆகவே இவ்விடயத்தில் அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட வேண்டும்.

நீர்மின்னுற்பத்தியின் ஊடாக 56 சதவீதமளவில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. மின்கட்டணத்தை எதிர்வரும் 6 மாதங்களுக்குக் குறைக்கும் வரை காத்துக் கொண்டிருக்க முடியாது. மின்கட்டணத்தை உடனடியாகக் குறைக்க வேண்டும் என்றார். (ம-7)

## நெல்லியடியில்...

டிற்கு அமைய விசாரணைகளை ஆரம்பித்துள்ள நெல்லியடிப் பொலிஸார் சிசிரிவி கமராக்களின் உதவியுடன் குறித்த பெண்ணினை மீட்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த கடத்தல் சம்பவமானது நெல்லியடி நகரப் பகுதியில் பலரது கண்களுக்கு முன்னே இடம்பெற்றிருந்த போதிலும் இச்சம்பவத்தினைத் தடுக்க எவரும் முன்வராமை வருந்தத்தக்கது. (ம-7,60)

மஹஜன சம்பத
திகதி 2025.01.11
சீட்டிழுப்பு இலக்கம் 5713
K 7 0 6 9 5 6
அத சம்பத
K 6 9 5 6
சீட்டிழுப்பு இலக்கம் 288

தன நிதானய
திகதி - 2025.01.11
சீட்டிழுப்பு இலக்கம் - 1743
N 11 49 62 67 N
41744

மெகா பவர்
திகதி 11/01/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2061
Q 14 30 46 58 61

லக்கி 7 VIP
திகதி 2025.01.11
சீட்டிழுப்பு இலக்கம் 539
Q 1 1 5 7 3 3 Q

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3955
சீட்டிழுப்பு திகதி 11.01.2025
W 26 63 65 78
W

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.01.11
சீட்டிழுப்பு இலக்கம் 1022
இடபம் 01 33 48 60 இடபம்
93695 46

உத்தியோகபூர்வ முடிவுகள்
11.01.2025 421
0 4 1 8 7 1 0
97886
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.28,959,312.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2687
சீட்டிழுப்பு திகதி 2025.01.11 தினம் சனிக்கிழமை
27 49 52 59 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 79,380,617.60

சனிதா
திகதி 11.01.2025 வெற்றி வாரம் 4848
10 45 65 71 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,580,220.80
71077

சசிரி
வெற்றி வாரம் 598
சீட்டிழுப்பு திகதி 11.01.2025 சனிக்கிழமை
13 26 38
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4399
சீட்டிழுப்பு திகதி 11.01.2025 தினம் சனிக்கிழமை
20 25 47 59 கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,742,702.40
180200

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
W 33 07 38 47 75
1863
11.01.2025 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.561,589,171.60

அத கோட்டிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2513
சீட்டிழுப்பு திகதி : 2025.01.11
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,017,136.00
18 25 42 73 C
729153

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியபிரிவுகள் ஆரம்பம்
18/01/2025

தொழிற்துறைக்கணக்காளர் ஆவதற்கு
aat [ Sri Lanka]
[AA1, AA2, AA3]
Qualification:- G.C.E. O/L 6 Passes
(Medium – Tamil & English)

கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business level I,II
Qualification:-G.C.E. A/L 3 Passes
(Medium – Tamil &English)

வங்கியியல் கற்கை நெறிகள்
Banking Courses
DBF & HDBF
Qualification:- G.C.E. A/L 3 Passes
( Medium – Tamil & English)

G.C.E A/L பெறுபேற்றினை எதிர்பார்திருப்பவர்களும் கற்கலாம்

Certificate Course in English

Further Details:
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382 / 0774405917
(C-2015)



## வாடகைக்கு உண்டு

40, Palaly Road,
மேல்த் தளக் கடை
வாடகைக்கு விடப்படும்.
(A.C உடன்)
076 342 8061
(3010)



## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN
GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER.
Practical to UKVI on Computer
(வாழ்க்கை துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam / IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்
OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.
T.P : 077 780 3970, 074 007 1970
(2507)



## விற்பனைக்கு

நல்ல நிலையில்
உள்ள
Scooty Streak
மோட்டார்
சைக்கிள்
விற்பனைக்குண்டு.
075 887 5036
(540)



## GET COMPUTER APPLICATION ASSISTANT - NVQ LEVEL 3

இந்தக் கற்கை நெறியானது மூன்றாம் நிலைக் கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. **முற்றிலும் இலவசம்**
காலம் : 420 மணித்தியாலங்கள்
வயது எல்லை : 16 முதல் 35 வரை ஆண், பெண் இருபாலரும் (க.பொ.த (சா/த) பரீட்சையில் தோற்றியிருக்க வேண்டும்)
வகுப்பு நடைபெறும் நாட்கள் : சனி மற்றும் ஞாயிறு (9.00 – 4.00pm)
**விண்ணப்ப முடிவுத் திகதி : 10-02-2025**
மேலதிக தொடர்புகளுக்கு : 076 232 5603/ 021 221 2922
Gnanam Education Trust (GET) 150/ 8, Sivarajah Ave, Thirunelveli.
(535)



## V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-2019)



## தென்னிந்திய தலயாத்திரை

35+ ஆலயங்கள்
12 நாட்கள்

திருப்பதி, மதுரை மீனாட்சி, சிதம்பரம், அறுபடை வீடுகள், திருவண்ணாமலை......
உள்ளடங்கலாக
35 க்கும் மேற்பட்ட ஆலயங்களை தரிசிக்க ஓர் சிறந்த வாய்ப்பு.
உங்களை சௌகரியமாகவும் பாதுகாப்பாகவும் அழைத்து செல்கிறோம்.
(3003)
Sribaby Travels & Tours
076 94 64 568
1/1 - 220, Stanly Road, Jaffna.



அறுசுவை உணவுகளிற்கு சுத்தமான
## றோயல் நெய்
Royal

உங்கள் வாழ்வின் இனிய தருணங்களை தரமான றோயல் நெய் கொண்டு தயாரித்த அறுசுவை உணவுகளுடன் கொண்டாடி மகிழுங்கள்

ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.



குறிப்பு :- யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும் சுப்பர்மார்க் கட்களிலும் பலசரக்கு கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்
Marketed By :-
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 2222 567
Packed By:-
Royal Industries®
(C-2017)



## Technicians தேவை

கொழும்பில் இயங்கி வரும் டிஷ் ஆண்டெனா விற்பனை மற்றும் சர்விஸ் செய்யும் கடைக்கு டிஷ் ஆண்டெனா பிட்டிங்கில் நன்கு அனுபவமுள்ள மோட்டார் சைக்கிள் மற்றும் ஆட்டோ டிரைவிங் செய்யக்கூடிய Technicians ஒருவர் உடன் தேவை. தங்குமிடம் உண்டு, சம்பளம் மற்றும் கமிஷன் உட்பட Rs.100,000/= வரை சம்பாதிக்க முடியும். தொடர்பு கொள்ளவும்.
T.ராஜ்குமார் : 077 771 0785
(525)



## விற்பனைக்கு

Fancy கடை ஒன்றிற்குரிய பொருட்கள் விற்பனைக்குண்டு.
- A/C
- கண்ணாடித் தட்டுகள்
- CupBoard
- Cash Counter

தொடர்புகளுக்கு : 076 444 9377
(C-2020)



XMARD
EVERYWHERE FOR YOU

யாழ்.கோப்பாயில் பிரம்மாண்டமான சூப்பர் மார்க்கெட்
## திறப்பு விழா
ஜனவரி | 13 | 2025
திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு
MANIPAY ROAD, KOPAY NORTH, KOPAY
(கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு அருகாமையில்)

XMARD திறப்பு விழாவை முன்னிட்டு விசேட தள்ளுபடி

| | | | |
|---|---|---|---|
| Rs. 229.00 Bulk Max 2kg வெள்ளைச் சீனி | Rs. 159.00 Bulk Max 2kg கோதுமை மா | Rs. 389.00 மஞ்சள் பருப்பு | Rs. 749.00 Bulk செத்தல் மிளகாய் |
| Rs. 979.00 Max 1 PCS Anchor 400g | Rs. 289.00 Bulk ரவை | Rs. 49.00 ~~80~~ Anchor Yoghurt | Rs. 1749.00 Max 1 PCS ~~2100~~ Protinex |
| Rs. 339.00 ~~425~~ Vim Liquid | Rs. 2499.00 ~~3000~~ Vitagen Vannila | Rs. 339.00 ~~380~~ Sunlight Powder Rose | Rs. 1129.00 ~~1180~~ Anchor Plus |
| Rs. 139.00 ~~175~~ Santoor Soap | Rs. 399.00 ~~480~~ Chick Shampoo | Rs. 2999.00 ~~3335~~ Diabeta Plus | Rs. 349.00 ~~500~~ Ocean Star Mackerel |
| Rs. 919.00 5kg ~~1150~~ Prima Wheat Flour | Rs. 3349.00 Max 1 PCS ~~3900~~ Sustagen 400g | Rs. 149.00 ~~200~~ Noodles | Rs. 349.00 ~~400~~ Pepsi 1.5L |
| Rs. 199.00 ~~270~~ Fems 10 Pcs Pads | Rs. 799.00 ~~1200~~ Marvel 16 Pcs | Rs. 459.00 ~~698~~ Cute Baby Wipes | Rs. 2699.00 ~~3000~~ Vijitha 10Kg |

மேலும் பல பொருட்கள்..
விசேட விலைக்கழிவுடன். சலுகை விலையில் பெற்றுக்கொள்ளலாம்
0742327545
MANIPAY ROAD, KOPAY NORTH, KOPAY
(கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு அருகாமையில்)
(C-2018)



## Happy Supermarket - உரும்பிராய்

| | |
|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 235/= |
| 1Kg சிவப்பு பருப்பு | - 275/= |
| 1Kg தீட்டல் பச்சை | - 255/= |
| 1Kg சர்க்கரை | - 265/= |
| 1Kg பயறு | - 560/= |
| 1Kg கடலை | - 490/= |
| 1Kg பொன்னி | - 237/= |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 660/= |
| 1Kg Prima கோதுமை மா | - 160/= |
| 01 மங்களம் ஊதுபத்தி | - 125/= ~~150/=~~ |
| 01 டசின் கற்பூரம் | - 290/= ~~370/=~~ |
| 01 டசின் தீப்பெட்டி | - 170/= ~~240/=~~ |

பொங்கல் பானை விசேட விலைகள்



| Size/ No | விலை |
|---|---|
| 08 | 400/= |
| 12 | 630/= |
| 14 | 780/= |
| 16 | 890/= |
| 18 | 980/= |

பொங்கலுக்கு தேவையான பொருட்களை விசேட விலைகளில் எம்மிடம் கொள்வனவு செய்யலாம்.
Facebook:- happy basket.lk
பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
Happy Supermarket
0777 8080 30
(539)



Tharany SUPERMARKET
எமது மாணவச் செல்வங்களுக்காக
தாரணி சூப்பர்மார்க்கெட்டின் அதிரடி சலுகை
5 கட்டு கொப்பிகள்
2 வாங்கினால்,
அதே 5 கட்டு கொப்பிகள்
2 இலவசம்
Free



இச்சலுகை
2025/01/15
அன்று மட்டுமே..
No 758, KKS Road,
Jaffna, Sri Lanka
077 1997 206
* நிபந்தனைக்குட்பட்டது
(C-2018)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.